வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

ஜனவரி 14 - 20, 2015

பக்கம் 24

விலை 30/-



## தளராத துணிவோடு...

வாசகர்கள், வாடிக்கையாளர்கள், விளம்பரதாரர் அனைவருக்கும்

தை திருநாள் வாழ்த்துக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சமில்லாத வாக்குகள்

**- அக்கினிக்குமரன்**





இலங்கையில் 7ஆவது ஜனாதிபதித் தேர்தல் மிகவும் சமூகமாகவும் , அமைதியாகவும் நடந்தேறியுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பெருமைப்பட்டுக் கொண்டுள்ளார். முன்னாள் ஊடகத் துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவும் கூட அமைச்சரவைப் பேச்சாளர் என்ற வகையில் தேர்தல் அமைதியாக நடந்து முடிந்து விட்டதாக மகிழ்ச்சி தெரிவித்திருந்தார்.

ஆனால் தேர்தல் சாவடிகளுக்கு அருகில் வடக்கில் குண்டுகள் வெடித்த சத்தம் அவர்கள் காதில் விழவில்லையோ அல்லது வழமை போல் அவை சிறு விடயங்கள் எனப் பொருட்படுத்தாமல் விட்டு விட்டார்களோ தெரியவில்லை.

பேருவளை, அளுத்கம ஆகிய இடங்களில் உயிர்ப்பலி உட்பட முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட பேரழிவுகளைக் கண்டு முஸ்லிம் தலைமைகள் கொதித்த போது சிறிய விடயங்களை பெரிதுபடுத்துகிறார்கள் எனக் கூறியவர்கள் அல்லவா இவர்கள்.

இலங்கையில் ஜனநாயக மரபுகளுக்கு அமைவாகவே தேர்தல் நடவடிக்கைகள் சுமூகமாகவும், சுதந்திரமாகவும் இடம்பெற்றதாக அவர்கள் பெருமைப்பட்டுக் கொண்டனர். ஆனால் பிரதி அமைச்சர்கள், மாகாண் சபை அமைச்சர்கள் , பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளும் அவர்கள் நீதிமன்றத்தினால் பிடியாணை உத்தரவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றன என்பதை அவர்கள் வழக்கம் போல மறந்தே விட்டனர். தேர்தல் தினத்தன்று கூட 238 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இவற்றில் வடபகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறிப்பிடத் தக்கவையாகும். வவுனியாவில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் அமைந்திருந்த தேர்தல் சாவடிக்கு அண்மையிலும் , யாழ். மாவட்டத்தில் அல்வாயிலும் குண்டுகள் வெடித்தன.

இவை திட்டமிட்ட வகையில் மக்களை அச்சுறுத்தித் தேர்தல் சாவடிகளுக்கு செல்வதை தடுக்கும் முகமாகவே மேற்கொள்ளப்பட்டன என்பதில் சந்தேகமில்லை.

அது மட்டுமன்றி மக்களைக் குழப்பும் வகையில் நீலப்படையணியினரால் போலியான வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. தேர்தல் வாக்களிப்பு நான்கு மணிக்கு முடிவடையும் என்ற போதிலும் அது ஆறுமணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்ற வதந்தியும் பரப்பப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்தத்தில் ஒருபுறம் மக்களை அச்சுறுத்தியும், இன்னொருபுறம் மக்களைக் குழப்பியும் மக்களை வாக்களிக்க விடாது தடுப்பதில் சில சக்திகள் தீவிரமாக ஈடுபட்டன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிக்கு வாக்களிக்கும் படி தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் தமிழ் மக்கள் வாக்குகளை யாருக்கு வழங்குவார்கள் என்பது தெளிவான விடயம். எனவே தமிழ் மக்களை வாக்களிக்காமல் தடுப்பது கூட மஹிந்த ராஜபக் ஷவுக்குச் சாதகமான ஒரு வாய்ப்பையே ஏற்படுத்தி இருக்கும். அப்படித் தடுத்திருந்தால் இன்று மைத்திரிக்குப் பதிலாக மஹிந்த மீண்டும் பதவியேற்றிருப்பார்.

தமிழ் மக்களை சுதந்திரமான முறையில் வாக்களிக்க விடாமல் தடுப்பது இப்போது தான் முதற் தடவையல்ல. கடந்த நடாளுமன்றத் தேர்தல்,உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என இடம்பெறும் அத்தனை தேர்தல்களிலும் இப்படியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பரப்புரை நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப் பட்டன. வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

கடந்த காலங்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினராலும், இனந்தெரியாத நபர்களாலும் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய தடைகளை உடைத்தெறிந்து தமிழ் மக்கள் தாம் விரும்பியவர்களுக்கே வாக்களித்து, தமது உரிமையை நிலை நாட்டினர்.

இந்த முறை ஜனாதிபதித் தேர்தலிலும் இதே வழிமுறைகள் பின்பற்றப்பட்டு தமிழ் மக்கள் குழப்பப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் பல இடையூறுகளுக்கு முகம் கொடுத்தனர். ஆனால் எவையுமே பலிக்கவில்லை என்பது தான் இங்கு முக்கிய விடயம்.

யாழ். மாவட்ட மக்கள் மஹிந்த ராஜபக் ஷவை விடவும் மைத்திரிபால சிறிசேனாவுக்கு ஒரு இலட்சத்துக்கு எழுபதினாயிரம் அதிகப்படியான வாக்குகளை வழங்கித் தமது வாக்களிக்கும் உரிமையை நிலை நாட்டினர். முல்லை மாவட்டத்தில் 70 வீதமான வாக்குகளும், வவுனியாவில் 70 வீதமான வாக்குகளும், கிளிநொச்சியில் 71 வீதமான வாக்குகளும், மன்னாரில் 79 வீதமான வாக்குகளும் மைத்திரிபால சிறிசேனாவுக்கு தமிழ், முஸ்லிம் மக்களால் வழங்கப்பட்டன.

அதாவது எந்தக் குழப்பங்களும், எந்த வன்முறைகளும், எந்த விதமான அச்சுறுத்தல்களும் எந்தவித பலனையும் ஏற்படுத்த முடியவில்லை.



1958 தொடக்கம் இன்று வரை தமிழ் மக்கள் ஒரு அச்சுறுத்தும் வாழ்வுக்குள்ளேயே பயணித்துக் கொண்டிருப்பவர்கள். ஒடுக்கு முறைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் உயிரிழப்புகளும், பேரிழிவுகளுக்கு மத்தியிலேயே எமது வாழ்வு தொடர்கிறது. எந்த ஒரு அச்சுறுத்தலோ அல்லது ஏமாற்றமோ எமது உரிமைப் போராட்டத்தையும் அதை நோக்கிய எமது நகர்வுகளையும் தடுத்து நிறுத்தி விட முடியாது என்பதை நாம் மீண்டும் மீண்டும் நிரூபித்து வந்துள்ளோம்.இந்த முறையும் அதை மீள உறுதிப்படுத்தியுள்ளனர் எம் மக்கள்.

பனாங்காட்டு நரிகள் சலசலப்புக்கு அஞ்சுவதில்லை.

இந்த உண்மையை உணராமல் இனஒடுக்கு முறையாளர்களும், அவர்களின் அடிவருடிகளும் அடாவடி மூலம் மக்களை அடக்கிவிடுவதற்கு முயன்று தமது மூக்குகளை உடைத்துக் கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் எதிர்காலம்

## பக்கத்துவீட்டுப் பார்வையில்...

–இந்தியன்

இலங்கை அதிபர் தேர்தலில் சக்திவாய்ந்த அதிபர் ராஜபக் ஷவைத் தோற்கடித்து பெரும் வெற்றி பெற்றுள்ளார் சிறிசேனா. அவரது வெற்றிக்கு இந்தியப்பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இந்தச் சூழ்நிலையில் இந்தியாவின் தென் பகுதியில் உள்ள அண்டை நாடான இலங்கையில் வெளியாகி உள்ள தேர்தல் முடிவுகள் முக்கியத்துவம் பெறுகிறது.

கடந்த 1945 ஆம் ஆண்டு நிகழ்ந்த உலகப் போருக்குப் பின் பிரிட்டனில் நடந்த தேர்தலில் அப்போதைய சக்தி வாய்ந்த பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் தோல்வி அடைந்தார். பல ஆண்டுகளாகப் போரை துணிச்சலுடன் சந்தித்த பிரிட்டன் மக்கள், இப்போது புதிய யுகத்தையும் அதே துணிச்சலுடன் சந்திக்கின்றனர் என்று சேர்ச்சில் கூறினார். அவருக்கு எதிராக விழுந்த வாக்குகள் அதைத்தான் பிரதிபலிக்கின்றன என்றார். அதே துணிச்சலைதான் இலங்கை மக்களும் இந்த தேர்தலில் வெளிப்படுத்தி உள்ளனர்.

அந்தத் துணிச்சல்தான் அதிபர் ராஜபக் ஷவின் தோல்வியை உறுதி செய்துள்ளது. எங்கள் வாக்குகளை யாரும் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது என்பதையும் இலங்கைத் தமிழ் மக்கள் தெளிவுபடுத்தி உள்ளனர். அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற மைத்ரிபால சிறிசேனாவுக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உடனடியாக வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அண்டை நாடான இலங்கையுடன் புதிய நல்லுறவை மேம்படுத்த அவருக்கு அழைப்பும் விடுத்துள்ளார். ஆனால், இந்த வெற்றி எதைக் காட்டுகிறது என்பதை [illegible] வேண்டும்.

முதலில் இலங்கையில் நடந்த தேர்தல் இரண்டு எதிர் எதிர் கட்சிகளுக்கு இடையில் நடந்தது அல்ல. இலங்கையில் ராஜபக் ஷவுக்கு செல்வாக்கு அதிகம். விடுதலைப் புலிகளிடம் இருந்து நாட்டை மீட்டவர் என்று கூறிக் கொள்பவர். தீவு நாடான இலங்கையில் ராணுவ பலத்துடன், பிரபலமான புள்ளி என்ற பிம்பத்துடன், குடும்ப அரசியலுடன் அதிபராகத் திகழ்ந்தவர் ராஜபக் ஷ. இது ஒரு பக்கம்.

இன்னொரு பக்கம் ராஜபக் ஷ அரசில் அமைச்சராக இருந்த சிறிசேனா. எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர். எனினும் பல ஆண்டுகளாக ராஜபக் ஷவுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர்.

இரண்டாவதாக இந்தத் தேர்தலில் சிறிசேனாவின் வெற்றி என்பதைவிட ராஜபக் ஷவை மக்கள் வெறுத்து ஒதுக்கி உள்ளனர் என்பதைதான் அதிகம் காட்டுகிறது. அதிபராக விடுதலைப் புலிகளை ஒடுக்கியது ராஜபக் ஷவின் சாதனையாக இருந்தால், தேர்தல் தோல்வி அவருக்கு மிகப்பெரிய சரிவு. ஆனால், விடுதலைப் புலிகளை ஒடுக்கும் விஷயத்தில் ராஜபக் ஷவுக்கு முன்பு ஆட்சியில் இருந்தவர்களுக்கும் ராணுவத்துக்கும் கருத்தொற்றுமை இல்லை.

அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள், அரசியல் எதிர்ப்புகள் இருந்தன. அந்த பிரச்சினைக்கு முடிவு கட்டினார் ராஜபக் ஷ. சர்வாதிகாரம் கொண்ட அதிபராகத் தன்னை அமைத்துக் கொண்டார். அதன்மூலம் இலங்கை முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். அதன்பின் தான் விடுதலைப் புலிகளுடனான கடைசி கட்ட போரின் போது, வெல்ல முடிந்தது. இதற்காக தனது ஒரு சகோதரரை (கோத்தபாய ராஜபக் ஷ) பாதுகாப்புத் துறை செயலாளராக்கினார். மற்றொரு சகோதரரை (பசில் ராஜபக் ஷ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக்கினார்.

இன்னொரு சகோதரரை (சாமல் ராஜபக் ஷ) நாடாளுமன்ற



சபாநாயகராக்கினார். மேலும் ராஜபக் ஷவின் மகன் நமல் அரசியல் வாரிசாக உருவெடுத்துள்ளார். இவர்கள் மூலம் அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டார். அதனால்தான் புலிகளுடனான கடைசிக் கட்ட போரை தான் நினைத்தது போல் நடத்த முடிந்தது. ஆனால் குடும்ப அரசியலால்தான் அவரால் தோல்வியைத் தடுக்க முடியவில்லை என்று அரசியல் ஆய்வாளர்கள் சிலர் கூறுகின்றனர்.

மூன்றாவதாக, தமிழர்களும் முஸ்லிம்களும் அதிக எண்ணிக்கையில் சிறிசேனாவுக்கு வாக்களித்துள்ளனர். இந்த நிலையில் தமிழர்கள், முஸ்லிம்களின் நம்பிக்கையை எத்தனை நாள்களுக்கு சிறிசேனா காப்பாற்ற நினைப்பார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். குறிப்பாக, அதிகாரப் பரவல் கொண்டு வரப்படுமா? தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் குவிக்கப்பட்ட இராணுவ வீரர்களை விலக்கிக் கொள்வாரா?

இலங்கை போரின்போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள், சித்திரவதை செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ராஜபக் ஷ முன்வரவில்லை. காணாமல் போன தமிழர்கள் பலரின் நிலை என்ன என்பது இதுவரை தெரியவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக போருக்குப் பின்னர் தமிழர்களின் மறுவாழ்வுக்காக தான் அமைத்த எல்.எல்.ஆர்.சி என்ற குழு அளித்த பரிந்துரைகளை ராஜபக் ஷ நிறைவேற்றவில்லை.

ஆனால் வெற்றி பெற்ற சிறிசேனா, வடக்கு மாகாணத்தில் மீண்டும் ராணுவம் குவிக்கப்பட மாட்டாது என்று ஏற்கெனவே கூறியுள்ளார். மாங்க் கட்சி என்றழைக்கப்படும் ஜேஎச்யூ, வலதுசாரி ஜேவிபி ஆகிய கட்சிகளின் ஆதரவு பெற்ற சிறிசேனாவுக்கு, அதிகாரப் பரவலாக்கத்துக்கு அனுமதி அளிக்க அவை பரிசீலிக்கலாம்.

அதேசமயம் கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கை பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்தவர்தான் சிறிசேனா. அதற்கு முன் கடந்த 1970 ஆம் ஆண்டு ஜேவிபி அமைப்பினர் சிறுபான்மையினர் மீது தாக்குதல் நடத்தினர். அதில் தொடர்புடையதாக கைது செய்யப்பட்டவர்தான் சிறிசேனா என்பதை மறந்து விடக்கூடாது.

எனவே இலங்கையில் பெரும்பான்மை அரசியலுக்கு கிடைத்த தோல்வி என்று நினைத்தால் தவறாக இருக்கும். அதற்குப் பதில் சில விஷயங்களில் இந்தியாவுக்குக் கிடைத்த வெற்றி எனலாம். சீன அதிபர் ஜி ஜிங்பிங், ராஜபக் ஷவுக்கு அதிக ஆதரவு அளித்தார். சீனா பல ஒப்பந்தங்களை ராஜபக்ச அரசுடன் செய்து கொண்டது. தான் ஆட்சிக்கு வந்தால் அந்த ஒப்பந்தங்களை ரத்து செய்வேன் என்று தேர்தல் பிரச்சாரத்தின்போது சிறிசேனா வாக்குறுதி அளித்தார். அப்படி அவர் செய்தால், சீனாவுக்குப் பெரும் பின்னடைவுதான்.

எனினும், இலங்கை மேம்பாட்டு திட்டங்களில் இந்தியா பலனடையும் வகையில் சீனாவை ஒதுக்கி விடுவார்கள் என்று இப்போதைக்கு நினைக்க முடியாது. ஆனால், இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஜப்பான் ஆகிய நாடுகளுடன் சம அளவில் நல்லுறவு ஏற்படுத்துவேன் என்று பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார்.

இலங்கையில் புதிய அரசை ஏற்படுத்த மக்கள் காட்டிய ஒற்றுமை, நம்பிக்கை, துணிச்சலைபோல், புதிதாக அமையும் சிறிசேனா அரசுடன் நல்லுறவை நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள இந்திய அரசும் துணிச்சலுடன் களமிறங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-என். ஜீவேந்திரன்-




தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து மஹிந்த ராஜபக் ஷ எனும் சர்வாதிகாரியை வீழ்த்தி இருக்கிறார்கள், இலங்கையின் ஜனநாயகத்தைப் பாதுகாத்திருக்கிறார்கள்.

சிங்கள மக்களின் பெரும்பான்மையான வாக்குகள் மஹிந்த ராஜபக் ஷவுக்கு வழங்கப்பட்டிருந்த போதும் வடகிழக்கு, கொழும்பு, மலையக தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகள் மைத்திரிபால சிறிசேனவை காப்பாற்றி இருக்கின்றன.

சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற தேர்தல் மாவட்டங்களில் மஹிந்த ராஜபக் ஷவே அதிகப்படியான வாக்குகளைப் பெற்றிருக்கிறார். இந்த பகுதிகளில் மைத்திரிபால சிறிசேனவை விட மகிந்த பெற்ற மேலதிக வாக்குகளை நோக்கினால்:-

களுத்துறையில் 46,486, காலியில் 83,132, மாத்தறையில் 85,388, அனுராதபுரத்தில் 42,754, கேகாலையில் 25,597, இரத்தின புரியில் 86,539, ஹம்பாந்தோட்டையில் 1,04,587, மொனரா கலையில் 67,469, குருணாகலையில் 80,266, மாத்தளையில் 12,952. மேற்குறிப்பிட்ட சிங்கள பிரதேசங்களில் மைத்திரியை விட மகிந்த 6,35,170 வாக்குகள் மேலதிகமாக பெற்று வெற்றி பெற்றிருக்கிறார்.

மைத்திரிபாலவுக்கு வாக்களித்த சிங்கள பிரதேசங்கள் என்று பார்த்தால் பொலனறுவை, கண்டி, கம்பஹா என்பன மட்டுமே இருக்கின்றன. இதில் பொலனறுவை மைத்திரிபாலவின் சொந்த மாவட்டம். அங்கு அவருக்கு 42,334 மேலதிக வாக்குகளும், தமிழ் முஸ்லிம் மக்களும் செறிவாக வாழும் கண்டியில் 88,409 மேலதிக வாக்குகளும், கம்பஹாவில் வெறுமனே 4 660 வாக்குகளும் என மொத்தமாக 1,35,403 வாக்குகளே மேலதிகமாக கிடைத்திருக்கின்றன.

இவை தவிர்த்து கொழும்பு என்பது ஐக்கிய தேசிய கட்சியின் கோட்டையாக விளங்குகிறது. இது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மிகச் செறிவாக வாழும் தேர்தல் மாவட்டங்களில் ஒன்று. இங்கு எல்லோரும் எதிர்பார்த்தபடி மைத்திரிபால 1,62,459 வாக்குகள் மேலதிகமாக பெற்றிருக்கிறார். கொழும்பையும் தனிச் சிங்கள மக்களின் பிரதேசமாக கொண்டு பொலனறுவை, கண்டி, கம்பஹா மாவட்டங்களுடன் சேர்த்தாலும் கூட மொத்தமாக மைத்திரிபாலவிற்கு சிங்கள மக்களால் கிடைத்த மேலதிக வாக்குகள் 2,97,862 மட்டுமே.

ஆனால் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களான யாழ்ப்பாணத்தில் 1,79,120, மட்டக்களப்பில் 1,67,791, வன்னியில் 1,07,040, நுவரெலியாவில் 1,27,266, திகாமடுல்லவில் (அம்பாறை) 1,12,333, திருகோணமலையில் 88,227 வாக்குகள் என மஹிந்தவை விட மைத்திரிபால சிறிசேனவுக்கு மொத்தமாக 7,81,777 மேலதிக வாக்குகள் கிடைத்துள்ளன.

கொழும்பை தவிர்த்துவிட்டு பார்த்தால் சிங்கள பிரதேசங்கள் மஹிந்தவுக்கு வழங்கிய மொத்த வாக்குகள் 31,40,971.

சிங்கள பிரதேசங்கள் மைத்திரிபாலவுக்கு வழங்கிய மொத்த வாக்குகள் 25,05,801.

அதாவது சிங்கள மக்கள் மஹிந்த ராஜபக் ஷவை 6,35,170 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற வைத்துள்ளனர்.

இப்படி மஹிந்தவின் வெற்றியை சிங்கள மக்கள் உறுதி செய்திருந்த நிலையில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து மஹிந்த எனும் இனவாத சர்வாதிகாரியை வீழ்த்தியுள்ளனர். இதன் மூலம் எதிர்வரும் காலங்களில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குப்பலமானது என்பதையும், முன்னெப்போதும் இல்லாத அளவில் இலங்கை அரசியலில் செல்வாக்கு செலுத்தப்போகிறது என்பதையும் தெளிவாகக் காண முடிகிறது.

இதேவேளை சுமார், 10 வருடங்களுக்கு முன்பே இப்படி மஹிந்த தோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்டிருக்கவேண்டியவர். வட மாகாண தமிழ் மக்கள் வாக்களிக்காத நிலையில் வெறும் 1,90,000 மேலதிக வாக்குகளால் மகிந்த ராஜபக் ஷ வெற்றி பெற்றார். ரணில் விக்கிரமசிங்க எதிர்பாராத தோல்வியைத் தழுவினார்.

நல்லவேளையாக் இந்தமுறை தமிழ் மக்கள் தேர்தலை புறக்கணிக்காது தமது வாக்குகளின் மூலம் மஹிந்த ராஜபக்சவிற்கு தண்டனை வழங்கி இருக்கிறார்கள்.

நவீன துட்டுகெமுனு அரசனாகத் தன்னை நிலை நிறுத்தி, தமிழர்களுக்கு எதிராகப் போரிட்டு வெற்றி பெற்ற அரசனாக மகாவம்சத்தில் இடம்பெறத் துடித்த இனவாதிக்குத் தமிழர்கள் தக்க பாடம் புகட்டி இருக்கிறார்கள். வெல்ல முடியாத போர் என்று சர்வதேசத்தாலும் வர்ணிக்கப்பட்ட போரை வென்று காட்டிய மாவீரனாக, சாகும் வரை ஜனாதிபதியாக அதிகாரத்துடன் வாழ ஆசைப்பட்ட மஹிந்தவின் பேராசைக்கு தமிழ் முஸ்லிம் மக்கள் சாவு மணியடித்திருக்கிறார்கள்.

அசைக்க முடியாத மஹிந்தவுக்கு சரியான போட்டியாளரை மகிந்தவின் மடியிலிருந்தே பிரித்தெடுத்து, சாணக்கியமாகச் சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து சாதித்த சந்திரிகா குமாரதுங்கவும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியவர்.

இலங்கை ஜனாதிபதியாக ஒருவர் இரு தடவைகளே பதவி வகிக்க முடியும் என்ற சட்டத்தை மீறி, அரசியலமைப்பை மாற்றி, நீதிமன்றத்தை விலைக்கு வாங்கி, மூன்றாவது முறையாகவும் அதிகாரத்தை சுகிக்க பேராசைப்பட்ட மஹிந்த தனது பதவிக்காலம் முடிய இன்னும் இரண்டு வருடங்கள் இருக்கும்போதே வீடு செல்ல வேண்டி இக்கட்டான ஏற்பட்டுள்ளது. செல்வாக்கு முற்றாக சரியும் முன்னரே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி வென்றுவிட வேண்டும் என்ற அள்ளக்கைகளின் ஆலோசனையை கேட்டு, ஆஸ்தான ஜோதிடரின் சொற்படி தேர்தலை மஹிந்த சந்தித்தார். மகிந்தவின் ஆஸ்தான ஜோதிடரான சுமணதாச அ்பேகுணவர்த்தன இன்னும் 20 வருட்ங்களுக்கு மஹிந்தவை அதிகாரத்திலிருந்து அசைக்கமுடியாது என்று சாத்திரம் கூறியிருந்தார். திருப்பதிக்குச் சென்று மஹிந்த எம்பெருமானின் ஆசியையும் வாங்கி இருந்தார். ஆனால் தமிழ் முஸ்லிம் மக்கள் மஹிந்தவின் ஆட்டத்தை முடித்துவைத்து விட்டனர்.

குற்றவாளி மஹிந்தவை வீழ்த்துவது என்ற நோக்கம் நிறைவேறி விட்டது. ஆனால் தமிழர்களுக்கான சம உரிமை என்ற நோக்கம் நிறைவேறும் காலம் அருகில் இருப்பதாகத் தெரியவில்லை.

அதற்கு இன்னமும் எத்தனைகாலம் போராடவேண்டியிருக்குமோ!

> **“ நவீன துட்டுகெமுனு அரசனாகத் தன்னை நிலை நிறுத்தி, தமிழர்களுக்கு எதிராகப் போரிட்டு வெற்றி பெற்ற அரசனாக மகாவம்சத்தில் இடம்பெறத் துடித்த இனவாதிக்குத் தமிழர்கள் தக்க பாடம் புகட்டி இருக்கிறார்கள். வெல்ல முடியாத போர் என்று சர்வதேசத்தாலும் வர்ணிக்கப்பட்ட போரை வென்று காட்டிய மாவீரனாக, சாகும் வரை ஜனாதிபதியாக அதிகாரத்துடன் வாழ ஆசைப்பட்ட மஹிந்தவின் பேராசைக்கு தமிழ் முஸ்லிம் மக்கள் சாவு மணியடித்திருக்கிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைவடையும் — — சுதந்திரக்கட்சி

- ஹரீஸ்



இலங்கையில் கடந்த 10 வருடங்களாக தொடர்ந்து வந்த குடும்ப ஆட்சிக்கான சாவு மணி அடிக்கப்பட்டுள்ளது. அரசியலில் மீண்டெழ முடியாத அளவுக்கு அனைத்து அதிகாரங்களையும் பறித்து மகிந்த அண்ட் பிரதேர்ஸ் கம்பனியின் செல்வாக்கை சரிய வைக்க புதிய அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. முதலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை பதவியில் இருந்து



மகிந்தவை தூக்கி வீட்டுக்கு அனுப்பி அரசியல் அநாதைகளாக்கும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனால் சிறிலங்கா சுதந்திரகட்சிக்குள் குத்து வெட்டுகள், குடுமிப்பிடிச் சண்டைகள் தீவிரமாகியிருக்கின்றன.

சுதந்திரக் கட்சியின் செயற்குழு கூடி மஹிந்தவை தலைமைப்பதவியில் இருந்து தூக்கி விட்டதான செய்திகள் கடந்த வாரம் வெளிவந்திருந்தன. மஹிந்த, சந்திரிகா ஆகியோர் கட்சியில் ஆலோசகர்களாகவும், தலைவராக ஜனாதிபதி மைத்திரி நியமிக்கப்பட்டிருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயமுனி சொய்சா தெரிவித்திருக்கிறார் .அத்துடன் துமிந்த திஸனாயக்கவை கட்சியின் பொதுச்செயலாளராகவும், ஜனக பண்டார தென்னக்கோனை தேசிய அமைப்பாளராகவும் கட்சியின் செயற்குழு நியமித்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர பிரியதர்சன யாப்பா கட்சி அப்படி ஒரு முடிவை ஒருபோதும் எடுக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவே இப்போதும் கட்சியின் தலைவர் எனத் தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பில் கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் "சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவு எனக்கே உண்டு. எனவே நானே கட்சியின் தலைவர்" என்று சொல்லி இருக்கிறார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் எதிர்காலம் இத்தகைய குத்துவெட்டுகளால் பிளவடையும் நிலையை எட்டியுள்ளது. ஜனாதிபதித்தேர்தல் வரை மஹிந்தவோடு ஒட்டியிருந்த சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் மைத்திரி பக்கம் தாவியிருப்பதாலும், சுதந்திரக்கட்சியை புதுப்பிக்க போவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருப்பதாலும் இனிவரும் நாள்களில் சுதந்திரக் கட்சிக்குள் பெரும் புயல் வீசப்போவது உறுதியாகிவிட்டது.

சுதந்திரக்கட்சி 64 ஆண்டு கால அரசியல் வரலாறை தன்னகத்தே கொண்டிருக்கிறது. 1931 ஆம் ஆண்டு எஸ். டபிள்யு .ஆர். டி. பண்டார நாயக்கவினால் ஸ்தாபிக்கப்பட்ட சிங்கள மகா சபையின் வளர்ச்சியில் தோன்றியதே சுதந்திரக் கட்சி.சிங்கள மகா சபையானது 1945 பொதுத் தேர்தல் வரை ஐக்கிய தேசியக் கட்சியை (ஐ.தே.க.) ஆதரித்து வந்தது. அப்போதைய பிரதமராக இருந்த . டி. எஸ். சேனநாயக்க பதில் பிரதமர் பதவியை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கு கொடுக்க மறுத்து தனது மகனான டட்லி சேன நாயக்கவுக்கு அந்தப் பதவியை அளித்ததைக் காரணம் காரணம் காட்டி 1951 இல் ஐ.தே.கவுக்கான தனது ஆதரவை விலக்கி கொண்டது சிங்கள மகாசபை.

இந்த நிலையில் சிங்கள மகாசபையின் ஆதரவுடனும் இடது சாரி இயக்கங்களின் ஆதரவுடனும் 1951 இல் பண்டாரநாயக்க சிங்கள மகா சபை மற்றும் இடது சாரி இயக்கங்களை உள்ளடக்கி முழுமையான அரசியல் கட்சியாக இலங்கை சுதந்திரக்கட்சியை உருவாக்கினார். 1952 இல் இடம்பெற இருந்த 2 ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்காக இந்தக்கட்சி அவசர அவசரமாக ஸ்தாபிக்கப் பட்டது. இதன்பின்னர் இந்தக்கட்சி இலங்கை அரசியலில் மிக முக்கியமான இடத்தை பிடிக்க தொடங்கியது. சிங்கள தேசிய வாதத்தைக் கக்கும் ஒரு இனவாதக் கட்சியாக அது பரிணமித்தது.



1956 இல் முதன் முறையாக ஆட்சி அமைத்தது சுதந்திரக் கட்சி. எனினும் 26 செப்டம்பர் 1959 அன்று கட்சியின் ஸ்தாபகர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க பிரதமராக பதவி வகித்த போது பௌத்த பிக்கு ஒருவரால் சுட்டு கொல்லப்பட்டார். அதன் பின் இந்தக்கட்சி அரசியலில் நலிவைச் சந்தித்தது. ஆனாலும் தன்னை சுதாகரித்து கொண்ட இந்தக்கட்சி அதன் ஸ்தாபகரின் மனைவியான சிறிமாவை களமிறக்கி அனுதாப வாக்குகளை பெற்று மீண்டும் தனது இருப்பை தக்க வைத்தது. சிறிமாவோ பண்டார நாயக்க மட்டுமல்லாது அவரது வாரிசுகளான சந்திரிகா, அனுரா ஆகியோரினால் சுதந்திரக்கட்சி மேலும் வளர்ச்சியைக் கண்டது. அதன் மஹிந்த கட்சியின் தலைமைப் பொறுப்பைத் தனதாக்கினார்.

இவ்வாறு வளர்ச்சி கண்ட சுதந்திரக்கட்சி மைத்திரியின் வெளியேறலுக்குப் பின்மெல்ல மெல்ல உடையத்தொடங்கி இப்போது சிதைவுறும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. சுதந்திரக்கட்சியின் யாப்பின் படி கட்சியின் உறுப்பினர்கள் யாராவது ஜனாதிபதியானால் அவர்களிடமே கட்சியின் தலைமைப்பதவி இருக்கவேண்டும். இதனடிப்படையில் தலைமைப்பதவி மைத்திரிக்கு செல்லவதற்கே வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. ஆனாலும் அவர் சுதந்திரக் கட்சியின் சார்பில் போடியிடாமல் பொதுஎதிரணியில் போட்டியிட்டதால் கட்சியின் யாப்பு இந்த விடயத்தில் செல்லுபடியாகாது என்று மஹிந்த அணியினர் வாதிட்டு வருகின்றனர். எப்படி இருந்தாலும் அதிகாரத்தின் பக்கமே உறுப்பினர்கள் சாய்வதால் மஹிந்தவின் கையை விட்டு சந்திரிகா-மைத்திரி கூட்டணியிடமே சுதந்திரக் கட்சி தஞ்சமடையும் என்று கூறப்படுகின்றது.

**சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் எதிர்காலம் குத்துவெட்டுகளால் பிளவடையும் நிலையை எட்டியுள்ளது. ஜனாதிபதித்தேர்தல் வரை மஹிந்தவோடு ஒட்டியிருந்த சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் மைத்திரி பக்கம் தாவியிருப்பதாலும், சுதந்திரக்கட்சியை புதுப்பிக்க போவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருப்பதாலும் இனிவரும் நாள்களில் சுதந்திரக் கட்சிக்குள் பெரும் புயல் வீசப்போவது உறுதியாகிவிட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை


sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 567 7609


## பாலும் தண்ணீரும்

எல்லோரும் எதிர்பார்த்ததைப்போலவே இலங்கையில் பெரும் ஆட்சிமாற்றம் நிகழ்ந்துவிட்டது. சில மாதங்களுக்கு முன்னர் 'இலங்கைக்கு வாருங்கள்' என்று பாப்பரசருக்கு அழைப்புவிட்டவர் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. ஆனால் பாப்பரசர் இந்த மாதம் 13 ஆம் திகதி இலங்கை மண்ணைத் தொட்டபோது அவரை வரவேற்றவர் புதிய ஜனாதிபதி மைத்திரிதான். மிகக் குறுகிய காலத்தில் யாருமே எதிர்பாராத வகையில் மஹிந்தவின் 10 வருட சாம்ராஜ்யம் முடிவுக்கு வந்திருக்கிறது.

எல்லோரும் சொல்வதைப்போல இந்த முடிவுக்குக் காரணங்களாக மைத்திரியோ, பொது எதிரணியோ, மக்கள் எதிர்ப்பலையோ என்பன மட்டுமே இருக்கமுடியாது.

யானை தன் தலையில் தானே மண் அள்ளிப் போடுவதுபோல தன்னுடைய சாம்ராஜ்ஜியத்தின் அழிவுக்கு மஹிந்தவே வித்திட்டிருந்தார். ஏனெனில் அவரின் ஆட்சி முடிய இன்னமும் இரண்டு வருடங்கள் மீதம் இருந்தன. அந்த இரண்டு வருடத்தில் அதிகாரத்தின் சுவையை அவரும், குடும்பத்தவர்களும் ஆற அமர இருந்து ருசிபார்த்திருக்க முடியும். ஆனால் ஆசை யாரைத்தான் விட்டது?

வழக்கமாகவே ஒருவர் இரு தடவைக்கு மேல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற அரசமைப்பையே 18 ஆவது திருத்தத்தின் மூலம் மாற்றி தன்னுடைய அதிகாரக்கனவின் காலத்தை நீட்டிக்க நினைத்தார் மஹிந்த. நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்ததால் சுலபமாகவே இந்த அரசமைப்புத் திருத்தத்தை அவரால் கொண்டுவரமுடிந்தது. தன்னுடைய ஆட்சியை இன்னும் 6 வருடங்களுக்கு விரிவாக்கம் செய்துவிட்டு அதன் பின்னர் தன்னுடைய மகனுக்கு அரசுப்பட்டம் சூட்டுவதே மஹிந்தவின் ஆசையாக இருந்தது.

ஆனாலும் என்னதான் வல்லவனாக இருந்தாலும் சிறிய தொருவிடயத்தில் கோட்டைவிடுவது வழமை. மஹிந்தவின் மிகப் பெரிய பலவீனம் சோதிடத்தின் மீதுள்ள அபார நம்பிக்கை. கடந்தகால தேர்தல் திகதிகளையோ அல்லது போர் தொடங்கும் நாளையோ தன்னுடைய சோதிடர்களின் சொற்படியே அவர் செய்துவந்தார். காலம் மஹிந்தவின் பக்கம் காற்றை வீசச் செய்ததால் அவர் தொட்டதெல்லாம் பொன்னானது. இதற்குக் காரணம் சோதிடத்தின் மகிமையே என்று மஹிந்தர் நம்பினார்.

எந்த வேலையைச் செய்வதென்றாலும் தன்னுடைய சோதிடரைக் கேட்காமல் தொடங்குவதில்லை என்ற கொள்கையை மஹிந்த சிந்தனையின் மையமாக்கிக் கொண்டார். "அடுத்த இருவருடங்களும் கெடுகாலமாக இருக்கும் என்பதாலும் அவருக்கு அதிர்ஷ்டத்தை 2015 ஆம் ஆண்டே அள்ளித் தரும் என்பதாலும் இன்னும் இருவருடங்கள் காத்திருக்காமல் இப்போதே தேர்தலை வைத்துவிடுங்கள்" என்று சோதிடர் சொன்னதை நம்பி களநிலைவரத்தை கவனத்தில் கொள்ளாமல் ஜனாதிபதித் தேர்தலை அறிவித்தார் மஹிந்த ராஜபக்ஷ. அதன் பலனை மஹிந்த அறுவடை செய்தபோது தோல்வி மட்டுமே அவரோடு கூட இருந்தது. அதுநாள் வரையும் ஒட்டுண்ணிகளாக இருந்த சோதிடரோ அல்லது அமைச்சர்களோ நாடாளுமன்ற உறுப்பினர்களோ பக்கத்தில் இருக்கவில்லை. தன் கண்முன்னேயே தான் கட்டிவைத்த சாம்ராஜ்ஜியம் தனக்கு எதிராக விஸ்வரூபம் எடுப்பதை அவரால் காணமுடிந்தது. இப்போது அவர் எல்லோராலும் கைவிடப்படும் அரசியல் அனாதையாகிக்கொண்டிருக்கிறார்.

இப்போது விடயம் அதுவல்ல. சிறுபான்மையினரின் வாக்குகள் இல்லாவிட்டால் மைத்திரிபால ஜனாதிபதியாக முடிசூடியிருக்க முடியாது. இதை அவர் மனதில் வைத்திருக்க வேண்டும். அத்தோடு மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் இருந்த ஊழல், சட்ட ஒழுங்குச் சீர்கேடு, அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றை இல்லாதொழிக்க வேண்டும். அவ்வாறில்லாமல் மஹிந்தவின் வழியிலேயே மைத்திரியும் பயணிக்க முயற்சித்தால் எப்படி அசைக்க முடியாத அரசராக தன்னை பிரகடனப்படுத்தியிருந்த மஹிந்த குப்புறக் கவிழ்ந்தாரோ அதைவிடவும் மோசமான வீழ்ச்சியை தன்னுடைய வாழ்வில் மைத்திரி சந்திக்க வேண்டியிருக்கும்.

மஹிந்தவின் ஆட்சியை இருண்ட யுகம் ஆக்கிய பலர் மைத்திரி வென்றவுடன் மஹிந்தவைக் கைவிட்டுவிட்டு மைத்திரியோடு கைகோர்த்துள்ளார்கள். இவர்களைத் தொடர்ந்தும் மைத்திரி தன்னோடு ஒட்டிக்கொண்டிருக்க விட்டாரானால் மஹிந்தவின் ஆட்சியில் நிகழ்ந்த அத்தனை அட்டூழியங்களும் மைத்திரியின் ஆட்சியிலும் தொடரத்தான் செய்யும். எனவே தான் போட்டியிட்ட சின்னமான அன்னத்தைப்போல பாலையும் தண்ணீரையும் இனங்கண்டு பிரித்து பாலை மட்டுமே மைத்திரி தன்னோடு வைத்திருக்க வேண்டும். மாறாக தண்ணீரும் கலந்துவிட்டால் இந்த ஆட்சியும் இருண்ட ஆட்சியாகவே மாறிவிடும்.

# கூடாரமிழந்த குற்றவாளிகள்

\- ஆசாத்

கடந்த எட்டாம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் பெறுபேறுகளை அடுத்து இதுவரை காலமும் ஜனாதிபதியாகப் பதவி வகித்துவந்த



மகிந்த ராஜபக் ஷ தனது பதவியைத் துறந்து 9 ஆம் திகதி காலையிலேயே அலரிமாளிகையை விட்டு வெளியேறிவிட்டார். அவர் வெளியேற முன்பு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் அழைத்துக் கலந்துரையாடலையும் நடத்தியிருக்கிறார். அவர் அதிகாரத்தில் இருந்த காலகட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பலத்தைப் பிரயோகித்து அரசியலமைப்பில் திருத்தத்தைக் கொண்டுவந்து தன்னை ஒரு சர்வதிகாரியாகவே நிலைநிறுத்திக்கொண்டார். அப்படியான ஒருவர் மக்களின் தீர்ப்பை ஏற்று உடனடியாகவே பதவியை விட்டு அமைதியான முறையில் வெளியேறியமை சிலருக்கு ஆச்சரியத்தை ஏற்படத்தியிருக்கக் கூடும்.

ஆனால் அவர் 10 வருடங்கள் ஒரு நாட்டின் அதிபராக இருந்தவர் என்ற வகையில் அதே கௌரவத்துடன் பதவியை விட்டு வெளியேறி அந்தப் பதவியின் தரத்தைப் பேணிக்கொண்டார்.

அவர் கௌரவமான முறையிலும் அமைதியாகவும் பதவியை விட்டு விலகியமை சிலருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதாவது அவரின் அதிகாரக் குடை நிழலில் நின்று கொண்டு கொலை, கொள்ளை, அதிகார துஷ்பிரயோகம், மக்கள் விரோத நடவடிக்கை என்பவற்றில் ஈடுபட்ட, தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளே இத்தகைய அதிர்ச்சிக்கு ஆளாகியுள்ளனர்.

இவர்களின் பல சமூக விரோத செயல்களில் இனம் தெரியாதவர்கள் என முகமூடியுடன் ஈடுபட்டு வந்த போதிலும்,அவர்கள் யார் என்பதைச் சகலரும் அறிந்து இருந்தனர். ஆனால் அவர்களின் பின்னால் கவசமாக நின்ற அரச அரச அதிகாரம் காரணமாக அவர்கள் கைது செய்யப்படுவதோ சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதோ இல்லை. அவர்கள் தாங்களே சுயமாகவும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் என்று சந்தேகிக்கப்படும் சிலருடனும் இணைந்து கொலை, கொள்ளை உட்பட பல சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

அவர்களைப் பொறுத்தவரையில் முன்னாள் ஜனாதிபதியின் பதவி விலகலும், புதிய ஜனாதிபதி பொறுப்பேற்றமையும் பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியிருக்கும். அவர்கள் மறைந்திருந்த கூடாரங்கள் இன்று இழுக்கப்பட்டு விட்டன. எனவே அவர்களை நோக்கி இனி எந்த இடையூறுமின்றி சட்டத்தின் கரங்கள் நீளலாம்.

அண்மையில் லங்கா நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்னலி கொட காணாமற்போன 2000 ஆவது நாள் நினைவு கூரப்பட்டது. அந்த நாட்களில் எம்.ரி.வி நிறுவனம் தாக்கப்பட்டு பெரும் சேதத்துக்கு உட்படுத்தப்பட்ட விடயமும் நினைவு கூரப்பட்டது.

அடுத்து பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரம கொலை நினைவு கூரப்பட்டது. இந்த சட்டவிரோத வன்முறைகள் தொடர்பாக எவரும் இன்றுவரை தண்டிக்கப்படவில்லை. லசந்தவின் கொலை தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்ட போதிலும் ஒருவர் சிறையிலேயே இறந்துவிட்டார். இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மற்றவர் சட்டமாஅதிபரின் ஆலோசனைக்கு அமைய விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வாறே நிமலராஜன் கொலை தொடர்பான சந்தேக நபர் வெளிநாட்டுக்கு ஓடிவிட்டார் கூறப்பட்டது. தராகி சிவராமின் கொலை தொடர்பாக இன்றுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இவை ஒரு சில உதாரணங்கள் மட்டுமே. ஆனால் ஏராளமான ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டு விட்டனர். பலர் மீது கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பல உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு ஓடிவிட்டனர்.

லங்கா நியூஸ், எம்.ரி.வி., உதயன், சுடர் ஒளி போன்ற ஊடக நிறுவனங்கள் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டு அழிவுகள் ஏற்படுத்தப்பட்டன. ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டனர்.

இப்படியான சட்டவிரோத வன்முறைகள் யாரால் மேற்கொள்ளப்பட்டன என்பதோ, அவர்களின் பின்னணியில் இயங்குவது யார் என்பதோ அப்படி ஒன்றும் இரகசியமான விடயம் அல்ல. ஆனால் அந்தக் குற்றவாளிகள் அதிகார நிழலில் இருந்ததால் அவர்களை நெருங்கவே சட்டம் அஞ்சியது.

அண்டைநாட்டு நீதிமன்றத்தால் தேடப்படும் குற்றவாளி என்று பிரகடனப் படுத்தப்பட்டவர்களும், மட்டக்களப்பில் முஸ்லிம் மக்களைக் கடத்திக் கொண்டு சென்று கொலை செய்தவர்களும், இன்னும் பல சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களும் அமைச்சர்களாகவும், பிரதியமைச்சர்களாகவும் பதவி வகிக்குமளவுக்கு சட்டம் மிதிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஊடகவியலாளர் சிவராம் ஆகியோரின் கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் சுதந்திரமாகவே நடமாடிவருகின்றனர்.

இத்தகைய குற்றவாளிகளைப் பாதுகாத்த கூடாரத்தின் சொந்தக் காரன் மூடை முடிச்சுக்களுடன் வெளியேறிவிட்டார். இப்போது குற்றவாளிகள் வெட்ட வெளியில் விடப்பட்டுவிட்டனர்.

எப்படியிருந்த போதிலும் நீதியும் நியாயமும் சில சமயங்களில் உறங்குவதுண்டு.ஆனால் இறந்துவிடுவதில்லை. போது புதிய ..... பங்கை வகிக்கம் என்பது வரலாறு. ..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமரன்

ஜனவரி 16
திருவிலில் தளபதியின் இழப்புச் செய்தியோடு தலைவர்.

கிட்டண்ணையும் அவர் தோழர்களும் கப்பலில்... படமாக... நம்பமுடியாத நிஜம்.

உயிர்ப்பு இருக்கின்றது.!

***

கிட்டண்ணை. மக்களின் இதயங்களில் கூடுகட்டி வாழ்ந்த பறவை அது. அது எப்படி முடிந்தது? அதொன்றும் அதிசயமானதல்ல.

அவசரமாக மேற்சட்டையைக் கூட ஒழுங்காக அணியாமல் கிட்டண்ணை அங்கு நிற்பார்.

"கிட்டர் நிக்கிறார் இனிப்பயமில்லை" மக்களின்

நடப்புக்களைப் பேசிக் கொண்டிருப்பார். சில மாலை நேரங்களில் இது நடக்கும். கிழவர்களுக்கோ தாராளமாக நேரமிருந்தது, கிட்டண்ணைக்கோ அப்படியல்ல. ஆனாலும் அந்த

# தளராத துணிவோடு...



படத்திலும் கிட்டண்ணையின் முகத்தில் கனிவான பார்வை.

தன் தலைவனை வரவேற்கும் மகிழ்ச்சியான சிரிப்பு.

அம்மா தன் இளைய மகனின் இழப்பைத் தாங்கமுடியாமல் மூத்த மகனைக் கட்டியணைத்து அழுதாள். அவளுக்குத் தலைவரும் மகன்தான். தேசம் அழுதது.

மக்கள் கூட்டம் தங்கள் நெஞ்சத்தில் வாழ்ந்தவனுக்கு அஞ்சலி செலுத்த வந்த தலைவனைப் பார்த்து கையசைத்து உறுதியான அசைவு. கண்ணீர் அலைகளினூடே பிறந்த நம்பிக்கை.

"தலைவன் இருக்கின்றான்" கிட்டண்ணை அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் அவை.

இதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்பு சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள்.

**அம்மா தன் இளைய மகனின் இழப்பைத் தாங்கமுடியாமல் மூத்த மகனைக் கட்டியணைத்து அழுதாள். அவளுக்குத் தலைவரும் மகன்தான். தேசம் அழுதது.**

முகங்களில் தலைவனைக் கண்ட மகிழ்ச்சி.

தலைவன் சொல்லப் போகும் வார்த்தைகளுக்காக ஏங்கி நிற்கும் நிமிடங்கள்.

"அடுத்ததாக, தளபதி கிட்டு அவர்கள் பேசுவார்!' மக்களின் ஆரவாரம். ஆர்ப்பரிப்பு.

அவர்களின் தலைவரின் முன்பு, அவர்களின் தளபதி. மகிழ்ச்சிப் பிரவாகம். தங்கள் தளபதியில் தாங்கள் வைத்திருக்கும் அன்பைத் தலைவனுக்குக் காட்டும் துடிப்பு. உற்சாகம் அந்த ஆர்ப்பரிப்புக்குள் வார்த்தைகள் தெளிவாக விழவில்லை. ஒன்றிரண்டு மனதில் விழுந்தது. அப்படியே பதிந்தது.

"தலைவர் இருக்கிறார் அவரை நம்புங்கள்" ஒரு தூய உள்ளத்தில் இருந்து வந்த சத்தியமான வார்த்தைகள். இன்றும்கூட அந்த வார்த்தைகளுக்குத்தான் எவ்வளவு

தங்களுக்காகச் சாவுக்கு முன்னால் நிற்கும் வீரன் ஒருவனை நேசிக்க எவருக்குமே காரணங்கள் தேவையில்லை.

கிட்டண்ணை சிறந்த ஒரு போராளி. வீரன் அவரின் துணிவு, வீரம், விவேகம், வேகமான செயல்.... எல்லாவற்றையுமே மக்கள் இரசித்தனர். விரும்பினர்.

தாய்நாடு தன் குழந்தையில் வைத்த பாசம் அது.

மக்கள் பயந்து நடுங்கி உறக்கமற்று விழித்த காலம். வீதிக்கு வீதி செத்தழிந்த காலம். எல்லாம் மாறிப்போனது. கிட்டண்ணையின் காலத்தில்தான்.

"கோட்டையில் இருந்து ஆமி வெளிக்கிடுறானாம்" மறுகணம்,

மனங்களில் துணிவு பிறக்கும். இராணுவத்தினர் திரும்பி ஓடியதும் ஊர் முழுவதும் வெற்றிக் களிப்பு, மகிழ்ச்சிக் கொண்டாட்டம். அது அவர்களின் பிள்ளைகள் பெற்ற வெற்றி.

பலாலி, நாவற்குழி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, ஆனையிறவு என்று எங்கு இராணுவத்தினர் புறப்பட்டாலும் அங்கு கிடண்ணை நின்றார். இரவிலும் பகலிலும் ஒவ்வொரு நாளும் சண்டை.

அந்தக் காலங்களில்தான் கிட்டண்ணை மக்களின் மனங்களில் வாழத் தொடங்கினார். அது நிரந்தரமான - அழிவற்ற - வாழ்வு. கோபித்தாலும் சண்டையிட்டாலும் சாகாத வாழ்வு.

வீதிகளில் ஓரங்களில், வயது முதிர்ந்த கிழவர்களுக்கு அருகில் விரித்து வைத்திருக்கும் வெற்றிலைச் சரையிலிருந்து பாக்குச் சீவலை எடுத்துக் கடித்தடி, கிட்டண்ணை நாட்டு

மாலை நேரங்களை அவர் விரும்பினார்.

அந்த முதியவர்களின் நிலையோ சொல்லத் தேவையில்லை. அவர்கள் பெரிதும் மதித்த வீரன் அவர்களுக்கு முன்னால்... உண்மையில் அந்த நேரங்களில் அவர்கள் மிகவும் பெருமைப்பட்டார்கள்.

வீட்டு முற்றங்களில், பின் கோடிகளில், வெற்றுடம்பில் இழுத்து முடியப்பட்ட காற்சட்டைகளுடன் "சிறிய கிட்டுக்கள்" நிற்பார்கள். இடுப்பில் கிட்டண்ணையின் '357 மக்னம்' சுழற் துப்பாக்கியைப் போன்று இழுபட்டபடி வளைந்த தடி ஒன்று தொங்கும்.

கள்ளன் - பொலிஸ் விளையாட்டெல்லம் மறைந்து புலிகள்- இராணுவத்தினர் விளையாட்டுத் தொடங்கியிருந்தது.

விளையாட்டிலும் 'சின்னக் கிட்டுக்கள்' ஒருநாளும் தேற்பதில்லை. வெற்றி என்றும் வெற்றிதான். விளையாட்டிலும்கூடக் கிட்டு மாமா தோற்பதை அவர்கள் விரும்பவில்லை.

இப்படித்தான் கிட்டண்ணை எல்லோரின் நெஞ்சங்களிலும் வாழ்ந்தார். அதனால் தான் அவருக்கு ஆபத்து என்ற போது மக்கள் துடித்தனர்.

அது 1987 இன் ஆரம்பம். வடமராட்சியில் இராணுவத்னருடன் நடந்த சண்டையொன்றில் கிட்டண்ணையின் கையில் பட்டிருந்த காயம் குணமாகிச் சில நாட்கள் சென்றிருந்தன.

அப்போதுதான் தேசவிரோதிகளால் கிட்டண்ணைக்குக் குண்டு எறியப்பட்டது.

குண்டு வெடித்தது தெரியும். ஆனால், கிட்டண்ணைக்கு என்ன நடந்தது என்பது மக்களுக்குச் சரியாகத் தெரியாது. தமிழீழம் எங்கும் அதிர்ச்சி பரவியது மக்கள் சிரிப்பை மறந்து சோகத்தில் ஆழ்ந்து போனார்கள். தமிழ் நிலம் எங்கும் கவலையில் தவித்தது.

**"கோட்டையில் இருந்து ஆமி வெளிக்கிடுறானாம்" மறுகணம், அவசரமாக மேற்சட்டையைக் கூட ஒழுங்காக அணியாமல் கிட்டண்ணை அங்கு நிற்பார்.**

**"கிட்டர் நிக்கிறார் இனிப்பயமில்லை" மக்களின் மனங்களில் துணிவு பிறக்கும். இராணுவத்தினர் திரும்பி ஓடியதும் ஊர் முழுவதும் வெற்றிக் களிப்பு. மகிழ்ச்சிக் கொண்டாட்டம். அது அவர்களின் பிள்ளைகள் பெற்ற வெற்றி.**

( அடுத்தவாரம் தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கியெறியப்பட்ட சர்வாதிகாரம்

- அஞ்சலி

இலங்கையில் குடும்ப ஆட்சியை நாட்டு மக்கள் முடிவுக்குக் கொண்டு வந்து மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று முடிவுகளும் அறிவிக்கப்பட்டு பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 7ஆவது ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார். கடந்த அராஜக ஆட்சிக்கு மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

அம்பாந்தோட்டையில் பிறந்த மஹிந்த ராஜபக்ச தனது தந்தையாரின் அரசியல் வழியிலேயே தானும் அரசியலில் நுழைந்தவர்.

1970 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியில் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினரானார். எனினும் 1977 ஆம் உறுப்பினர் பதவியை இழந்தார். மீண்டும் 2004 ஆம் ஆண்டில் இருந்து 2005 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பிரதமராக இருந்தார்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகச் சந்திரிகா பண்டாரநாயக்க இருந்தார். எனினும் அவரது ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்த நினைத்த சிங்கள மக்கள் தேர்தலில் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்சவை வாக்கிட்டு வெற்றிபெறச் செய்தனர்.

அதேவேளை 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர். இதற்கமைய தமிழ் மக்கள் 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை புறக்கணித்திருந்தனர். இருப்பினும் தமிழர்களது வாக்குகள் இன்றி 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு ஆட்சிப் பீடம் ஏறினார் மஹிந்த.

அவர் தனது ஆட்சியில் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்குப் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார். அவரது காலப் பகுதியில் வடக்கு-கிழக்கில் பலர் காணாமல்போயினர்.கடத்தப்பட்டனர். சுடப்பட்டனர்.

தனது ஆட்சியில் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டிருந்த மஹிந்தவுக்கு மாவிலாறு தண்ணீர் விநியோகம் முதலாவது காய் நகர்த்தலாக அமைந்தது. அது மாவிலாற்றில் ஆரம்பித்து முள்ளிவாய்க்காலில் முடிவுற்றது. பல்லாயிரக்காண மக்கள் கொல்லப்பட்டும் , அங்கவீனர்களாகியும், காணாமல்போகச் செய்யப்பட்டும் 2009 மே 18 ஆம் திகதி போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

போர் முடிந்து பல ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழ் மக்களின் தீர்வுக்கான செயற்பாடுகள் எவையும் மஹிந்தவால் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் மீண்டும் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. அப்போது வடக்கு மக்கள் வாக்களிக்கும் நிலையில் இருக்கவில்லை. முகாம்களிலும், தடுப்புக்களிலும், காணாமல்போனவர்களாகவும் நலிவடைந்தவர்களாகவும் அவர்கள் காணப்பட்டனர். இதனால் மஹிந்தவை எதிர்த்து முழுமையாக வாக்களிக்க முடியவில்லை.

**தென் பகுதியில் உள்ள மக்கள் பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தினார், அபிவிருத்தியைக் கொண்டு வருகின்றார் என்ற எண்ணப்பாட்டில் மஹிந்தவுக்கு வாக்களித்து அவரை இரண்டாம் முறையாக ஆட்சிப் பீடம் ஏற்றினர்.**

ஆனால் தென் பகுதியில் உள்ள மக்கள் பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தினார், அபிவிருத்தியைக் கொண்டு வருகின்றார் என்ற எண்ணப்பாட்டில் மஹிந்தவுக்கு வாக்களித்து அவரை இரண்டாம் முறையாக ஆட்சிப் பீடம் ஏற்றினர்.



அன்றைய காலப் பகுதியில் இருந்து குடும்ப ஆட்சி மேலும் வலுப்பெற்றது. தனது அண்ணனை, தம்பிகளை, மகனை , மருமகனைப் பதவிகளில் அமர்த்தி ஆட்சியைப் பலமாக நகர்த்திச் சென்றார்.

இந்தக் குடும்ப ஆட்சிக்குக் காலப்போக்கில் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் பலிக்கடா ஆக்கப்பட்டனர். அபிவிருத்தி என்ற அடிப்படையில் தனது ஊருக்கு தேவையான அனைத்து வசதிகளையும் மேற்கொண்டதுடன்.தங்களது பதவியும், பெயரும் எந்தக்காலத்திலும் நிலைத்து நிற்கவேண்டும் என்பதற்காகத் தங்களது பெயர்களில் கட்டடங்கள், பெரும் முதலீடுகளை மேற்கொண்டனர். இவை அனைத்தும் அம்பாந்தோட்டையிலேயே நடைபெற்றன.

ஏனைய மாகாணங்களுக்கு மகிந்த வழங்கிய அபிவிருத்தி வீதி திருத்தல் தான். அதிலும் பெருந்தெருக்களே புனரமைக்கப்பட்டன. இன்னும் எத்தனை ஆயிரம் வீதிகள் திருத்தப்படாது உள்ளன.

இது ஒரு புறமிருக்க 2009 ஆண்டு இடம்பெற்ற போரில் மனித உரிமை மீறல்களில் மகிந்த அரசு ஈடுபட்டது என்ற குற்றச்சாட்டு உள்நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளாலும் சர்வதேசத்தினாலும் முன் வைக்கப்படுகின்ற நிலையில் இதுவரை எந்த முன்னேற்றமான விசாரணைகளோ தீர்வுகளோ மேற் கொள்ளப்படவில்லை.

இதற்கு நீதியாக தீர்வு ஒன்றினைப் பெற மஹிந்த சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனத் தமிழர்கள் எண்ணுகிறார்கள்.

இந்த மஹிந்த அரசு பயங்கரவாதத்தை ஒழித்துச் சமாதானத்தை ஏற்படுத்தியதாக அறிவிக்கப்பட்டு 5 வருடங்களைக் கடந்துள்ள நிலையிலும் சிறுபான்மையினருக்கு நிலையான தீர்வு ஒன்று பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லையென்மேலும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல மஹிந்த அரசு சிறுபான்மையினருக்கு அநீதிகளை இழைத்து வந்தது.

இந்த அரசினால் பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த நாட்டு மக்களும் ஒன்றிணைந்து சிறந்த பாடம் ஒன்றைப் புகட்டியுள்ளனர். சிறுபான்மையினருக்கு மட்டுமல்ல பெரும்பான்மையினருக்கும் மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்ற எண்ணம் இருந்துள்ளது என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு

அத்துடன் அராஜகத்துக்கு கிடைக்கும் மக்களின் பதில் இன்றும் என்றும் எவருக்கும் இதுவே என்பதை இன்றைய ஜனாதிபதித் தேர்தலின் முடிவு தெட்டத் தெளிவாகக் காட்டியுள்ளது.

எனவே எதிர்காலத் தலைவர்களும் இதனைக் கருத்திற்கொண்டு நாட்டையும் மக்களையும் ஆட்சி செய்யவேண்டும் என்பதே மக்கள் ஆணை. இல்லாவிட்டால் அவர்களும் மக்களால் தூக்கியெறியப்படுவார்கள் என்பதற்கு மஹிந்த மிகப்பிந்திய உதாரணம்.

**எதிர்காலத் தலைவர்களும் இதனைக் கருத்திற்கொண்டு நாட்டையும் மக்களையும் ஆட்சி செய்யவேண்டும் என்பதே மக்கள் ஆணை. இல்லாவிட்டால் அவர்களும் மக் களால் தூக்கியெறியப்படுவார்கள் என்பதற்கு மஹிந்த மிகப்பிந்திய உதாரணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைச்சிட்டாங்களே ஆப்பு!

**- ஊழியான்**

மைத்திரிபால சிறிசேனா இலங்கையின் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின் 11.1.2014ஆம் திகதி கண்டியில் இடம்பெற்ற தனது கன்னி உரையில் முன்னாள் ஆட்சியாளர் மஹிந்தவுக்கு ஒரு செய்தியினைக் கூறியுள்ளார்.

இந்த நாட்டை நல்ல மனிதனே ஆள வேண்டுமே தவிர ஒரு அரசன் ஆளக் கூடாது என்று கூறியுள்ளார் மைத்திரி. அப்படியானால் இதுவரை காலமும் இலங்கையினை ஆட்சி செய்தவர் அரசன் என்று சொல்லாமல் சொல்கிறார் அவர்.

உண்மையில் அதனை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அரசனுக்குரிய அத்தனை செயற்பாடுகளையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷ செய்துவிட்டு சென்றுவிட்டார். அதனைத் தான் புதிய ஜனாதிபதியும் சொல்லியிருக்கிறார் போலும். அதுமட்டுமின்றி இதுவே எனது முதலாவதும் இறுதியுமான ஜனாதிபதித் தேர்தல். இன்னொரு முறை தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்றும் மைத்திரி கூறியுள்ளார்.

இதனை வரவேற்க வேண்டும். முன்னர் ஆட்சிக் கட்டிலில் இருந்த மகிந்த ராஜக் ஷ சட்டத்தை மாற்றி மூன்றாவது முறையாகவும் அரசனாக நினைத்தார். ஆனால் அது தமிழர்களால் கைநழுவிப் போகின்றது என்று தெரிந்தவுடன் நாட்டைஇராணுவ ஆட்சியின் மூலம் கைப்பற்றலாம் என்று கனவு கண்டார். அதற்கு ஏற்றாற் போல பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாய ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காமல் மாலைதீவிலிருந்து கொண்டு காய்களை நகர்த்த முயன்றார்.

ஆனால் எந்தக் காய்களும் நகரவில்லை. மாறாக மகிந்த ராஜபக் ஷ என்ற காய் மட்டும் அலரிமாளிகையிலிருந்து நகர்த்தப்பட்டது. இதனைச் சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் மஹிந்த குடும்பத்தினர். ஏனென்றால் இதுவரை காலமும் தமது கட்டுப்பாட்டுக்குள் இருந்த படைத்தலைமைகள் தமது சொல்லைக் கேட்கும் என்றே நினைத்திருப்பார்கள். ஆனால் படைகளும் கேட்கவில்லை. சட்டமா அதிபரும் சம்மதிக்கவில்லை.

இதனால் கடுப்பாகி போன மஹிந்த என்ன செய்வது என்று தெரியாமல் அதிகாலையிலே தனது உத்தியோகபூர்வ இருப்பிடத்தினை விட்டு நடையை கட்ட ஆரம்பித்தார். வடக்கில் இந்த முறை கடந்த ஜனாதிபதி தேர்தலில் பார்க்க அதிக வாக்குகள் தனக்குக் கிடைக்கும் என்று மார் தட்டியவர் மஹிந்த. ஆனால் அது நடக்கவில்லை

நாடு ஒரு மாற்றத்தை வேண்டுகிறது என்று கூறினார்கள். அதற்குத் தானே நீங்கள் வாக்களித்துள்ளீர்கள், அதைத்தான் கொடுத்தீர்கள். ஆகவே இப்போது மாற்றம் வந்துள்ளது. அந்த மாற்றம் தமிழர்களால் நிகழ்ந்துள்ளது என்று தனது சொந்த ஊர் மக்களிடம் (தங்காலையில்) கூறியிருக்கிறார் மஹிந்த.

தமிழர்கள் தமக்கு மஹிந்த செய்த கொடுமைகளை ஒருபோதும் மறக்க மாட்டார்கள். அதேபோல இந்தமுறை நடைபெற்ற தேர்தலில் தமிழர்கள் தனக்கு ஆப்பு வைத்ததை மஹிந்தவும் மறக்க மாட்டார். கூட்டிக் கழித்துப் பார்த்தால் மஹிந்த செய்த கொடுமைகள் தமிழர்களுக்கு அதிகம் என்று தான் கூறவேண்டும்.

இது இவ்வாறு இருக்க தேசிய அரசு ஒன்றினை அமைக்க அழைப்பு விடுத்துள்ளார் மைத்திரி. அதாவது எதிர்கட்சிகள் இல்லாத அரசு ஒன்றை நிறுவதற்கு அழைத்திருக்கின்றார் இதனை எத்தனை கட்சிகள் ஏற்றுக் கொள்ளப் போகின்றன என்ற கேள்வி எழுந்துள்ளது.



மஹிந்த ராஜபக் ஷவின் மகிந்த சிந்தனை எதைச் சாதித்தது என்று இதுவரை யாருக்கும் தெரியாது. ஆனால் மைத்திரியின் 100 நாள் வேலைத்திட்டம் எப்படி நடைபெறப் போகிறது என்று எல்லோரும் விழிப்பாக பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த 100 நாள் வேலைத்திட்டத்தில் குறிப்பிட்ட நாளுக்கு முன்னதாகவே ஒரு சிலவிடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியதே.

**இந்த நாட்டை நல்ல மனிதனே ஆள வேண்டுமே தவிர ஒரு அரசன் ஆளக் கூடாது என்று கூறியுள்ளார் மைத்திரி. அப்படியானால் இது வரை காலமும் இலங்கையினை ஆட்சி செய்தவர் அரசன் என்று சொல்லாமல் சொல்கிறார் அவர்.**

இவையெல்லாம் ஒருபுறமிருக்க புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்த பிரிட்டன் பிரதமர். இலங்கை மீது ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் முன்னெடுப்பட்டு வரும் சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருப்பது இங்கு கவனிக்கத்தக்க ஒன்று. ஏனெனில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைக் கூட்டத் தொடரில் இலங்கை விடயங்கள் மீண்டும் எடுத்துக் கொள்ளப்படப் போகின்றன என்பதையே பிரிட்டன் பிரதமரின் கோரிக்கை சொல்லி நிற்கிறது. ஆகவே மைத்திரி வந்தால் சர்வதேச விசாரணை என்ற விடயம் அமுங்கிப் போய்விடும் என்ற ஊகத்துக்கு மாறாக போர்க்குற்ற விசாரணையை நடத்துவதில் சர்வதேசம் தொடர்ந்தும் வெளிப்படுத்தும் உறுதித்தன்மை தமிழர்களுக்கு சற்று ஆறுதலைக் கொடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சொந்தக் செலவில் ஒரு சிறிய காவல் படையை உருவாக்கியது. காவல் படை போதவில்லை என்று சொல்லி பின்னர் ஒரு பிரத்தியேக இராணுவ அமைப்பையும் உருவாக்கியது. க்யூபா வில் முதல் முறையாகத் தொடங்கப்பட்ட இராணுவ அமைப்பு யுனைடெட் ப்ரூட் நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்தது தான் என்பது விசித்திரமான உண்மை. க்யூபா அரசாங்கம் கைகளைப் பின்புறம் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்ததைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை.

யுனைடெட் ப்ரூட் நிறுவனத்தை தவிர க்யூபாவில் அரசாங்கம் என்ற ஒன்று செயல்படுகிறதா என்றே யாருக்கும் தெரிய வில்லை. பள்ளிக் கூடங்கள் கிடையாது. மருத்துவமனைகள் கிடையாது. வேலை வாய்ப்பு வசதிகள் கிடையாது. மருத்துவ மனைகள் கிடையாது. ஆனால் பலமான இராணுவம் மட்டும் உண்டு. எல்லாமே கரும்புகளுக்காகத் தான். கரும்புகள் மட்டும் இல்லையென்றால் க்யூபாவின் சரித்திரத்தை முதல் பக்கத்திலிருந்து மீண்டும் மாற்றி எழுத வேண்டி வரும். இயற்கை இரக்கப்பட்டு வழங்கிய இந்தக் கொடையை நம்பியே க்யூபர்கள் உயிர் வாழ்ந்தனர். சர்க்கரை தான். க்யூபாவின் உயிர் நாடி என்றான பிறகு, கரும்புகள் பயிரிடும் நிலங்களை வைத்திருப்பவர்களே அதிகாரம் படைத்தவர்களாக மாறினர். அவர் களுக்கு அடிபணிந்து ஊழியம் செய்யும் விவசாயிகள் கிட்டத்தட்ட அடிமைகளைப் போலவே வாழப் பழகிப் போயிருந்தனர். யுனைடெட் ப்ரூட் நிறுவனம் கொழுத்துக் கொண்டே போனது. அவர்களது ஏற்றுமதிக்கும் லாபத்துக்கும் வரிகள் விதிக்கக்கூட திராணி யற்றுப் போயிருந்தது க்யூபா அரசாங்கம். யுனைடெட் ப்ரூட் நிறுவனத்தாரின் வாயிலி ருந்து வரும் வார்த்தைகளே சட்டமாக மதிக்கப்பட்டது.

ஏஞ்சலுக்கும் கரும்புகளே அடைக்கலம் கொடுத்தன. தோட்டத்தில் வேலைக்குப் புகுந்த மாத்திரத்திலேயே ஏஞ்சலுக்குத் தெரிந்து விட்டது. அவரது புதிய வாழ்வின் தொடக்கப் புள்ளியே கரும்பு தான் என்று. முதலில் அவருக்கு சிறு சிறு வேலைகளே அளிக்கப்பட்டன. சொற்பமான வருமானம் தான். ஏஞ்சலு க்கு திருப்தி ஏற்படவில்லை. புதிதாக பெரிய அளவில்வேறுஏதேனும்செய்யவேண்டும் என்று விரும்பினார். நிறைய சிந்தித்தார். தன்னுடைய பணியைச் செய்து முடித்து விட்டு கிடைக்கும் நேரத்தில் தோட்டங் களைச் சுற்றி சுற்றி வந்தார். அங்கு நடை பெறும் ஒவ்வொரு பணியையும் கவன மாகப்பதிவுசெய்து கொண்டார். தான் தேடிக் கொண்டிருக்கும் அற்புத வாய்ப்புயார் கண் களுக்கும் படாமல் இங்கே தான் எங்கோ ஒளிந்து கிடக்கிறது என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. ஒருதிட்டம் உருவானது. தொழிலாளர்களை அழைத்து அவர்களி டம் பேசினார். மளமளவென்று சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தனது கட் டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். பிறகு ஓர் அமெரிக்க நிறுவனத்தை அணுகி 'தோட்ட வேலை செய்வதற்கு தகுந்த வேலையாள்களை அனுப்பிவைக்கட்டுமா? என்றுகேட்டார். அவர்களும் ஒப்புக் கொண டனர். ஏஞ்சல் எதிர்பார்த்த வருவாய் கிடைத் தது: தனது திட்டத்தை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தினார் ஏஞ்சல்.

நிலங்களை குத்தகைக்கு எடுத்து சீர மைத் தார். சர்க்கரை ஆலைக்குத் தேவைப் படும் விறகுகளை வெட்டியெடுத்து வந்து விற் கத் தொடங்கினார். ஏஞ்சலுக்குக் கீழே வேலை செய்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. லாபமும் தான்.


ஏஞ்சலின் பணியும் சுலபமானதாயிற்று. பிற தொழிலாளர்களைப் போல் கடுமை யாக உழைக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போனது.




1-நெஞ்சுக்குப் பின்புறம்.
2-இனிப்பானது.
3- புடைவை.
4- செல்வம்.
6- வேகமான செயல் போக்கு
9 - மிகுந்த.
11- எதிரிகள்.
13-தமது.
15- முதுகுவளைவதால் ஏற்படுவது.
16- அமிர்தம்.
18-நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம்.
19- வெடித்தால் சேதம் ஏற்படுத்த வல்லது.
21-விழி.
22- வலிமை.
24 - சமய

## சொற்சிலம்பம் போட்டி இல. 655

மேலிருந்து கீழ்



இடமிருந்து வலம்

1- ஒருவருக்கு முன்னால் அவரைப் போற்றிப் புகழ்வது.
5- திறப்பு.
7- இரும்பில் பிடிப்பது.
8- நுண்ணுயிர்.
10 - கூட்டம்
12 - வாசலில் இருப்பது.
14- நெருப்பில்லாமல் இது வராது.
15- சேவல் விடிகாலையில் செய்வது.
17- சொற்களின் சேர்க்கை.
20-மணத்தல்.
22- இசைப்பாட்டு.
23 -குளிர்மை
24- குழந்தைச் செல்வம் கிட்டாத தன்மை.
25 - இணக்கம்

அனுப்புபவர் பெயர்:--------------------------------------

விலாசம்:--------------------------------------------

---------------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டி இல. 655

■ சொற்சிலம்பம் போட்டி 655ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, பெப்ரவரி 04 ஆம் மற்றும் பெப்ரவரி 11 ஆம் திகதிய சுடர்ஒளி யில் பிரசுரமாகும். தபா லட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

போட்டி இல 652இல் பரிசு பெற்றோர்

1
வி.விஸ்ணுஜன்,
சிவகுருவீதி, கேணியடி
கொக்குவில் மேற்கு
கொக்குவில்.

2
அ.ராதாமணி,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

3
க.தில்லையம்பலம்,
கதிர்காம கோவிலடி,
வதிரி, கரவெட்டி.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவல கத்திலும், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609

## பாராட்டுப் பெறுவோர்

இ.செல்லம்மா,
மே/பா வே.இராசநாயகம்,
கோறன்பற்று, பளை

பொன்.கயிலாயப் பிள்ளை,
இல77, 2 ஆம்பகுதி,
விசுவமடு மேற்கு,
விசுவமடு.

செல்வி.சிவநாதன் திஷாணி,
2 ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

சு.மாதவி,
தொட்டிலடி மத்தி,
சண்டிலிப்பாய்.

தா.சிறீதரன்,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

## சொற்சிலம்பப் போட்டி 653இன் விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 1.அகம்பாவம் | 1. அசம்பாவிதம் |
| 2.சனி | 6. கனி |
| 3.பாமரன் | 7.மதலை |
| 4.விதம் | 9.அரம் |
| 5.தலை | 10.ஆல் |
| 8.நல்கு | 11.பாவலன் |
| 9.அலம்புதல் | 13.படகு |
| 10.ஆடம்பரம் | 14.வடம் |
| 12.வட | 15.கோலம் |
| 13.பல | 16.புதன் |
| 15.கோன் | 18.பகு |
| 17.தனி | 20.மதனி |
| 19.கும்பி | 21.காரம் |
| 20.மடி | 22.குடில் |
| 21.காடு | 23.குடும்பி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான உதவி

ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு 'யாராவது காப்பாற்றுங்கள்' என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது.

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய் கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. 'பெரியவரே. உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு' என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விட மாட்டேன் என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். 'ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?' என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே தம்பி.. 'நான் உனக்கு உதவிதான் செய்தேன்' என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார். 'நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றி கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்' என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.





# பள்ளிச் சீருடை

சீருடையாம் சீருடை
எங்கள் பள்ளிச் சீருடை
தினம் தோறும் குளித்து
சுத்தமாக துவைத்து
நாங்கள் அணியும் சீருடை
அனைவரும் சம மென்று
சொல்லித் தரும் சீருடை
அம்மா போட்ட சீருடை
அரசு வழங்கும் சீருடை
அணிந்தாலே மகிழ்ச்சி தரும்
அழகு மிளிர்ந்த சீருடை

# வர்ணம் தீட்டி மகிழுங்கள்






# காக்கா ஏன் கறுப்பாச்சு?

(பர்மா நாட்டு நாடோடிக்கதை)

நிறைய காலத்துக்கு முன்னால் காக்கா வெள்ளையாக இருந்ததாம். வெள்ளை என்றால் அப்படி ஒரு வெள்ளை. அந்தக் காலத்தில் காக்கா நிறையத் தூரம் பறக்குமாம். சூரியன் வரைக்கும் பறந்து போகுமாம். அப்படி இருந்த காக்கா எப்படி கறுப்பாச்சு? செல்றேன்... கேளுங்கள்...

சூரியபூர் நாட்டோட ராஜாவுக்கு ரொம்ப வருடம் கழிச்சு அழகான இளவரசி பிறந்தாளாம். கொள்ளை அழகு. குழந்தையில இருந்து வீட்டை விட்டே வெளிய வரவில்லையாம். பெரியவங்களாகி கல்யாண வயசில வெளிய விளையாட வந்தாளாம். அவள் பெயர் அங்கிகா. அவள் விளையாடுவதைப் பாத்தால் சூரியனுக்கு மிகவும் பிடிச்சுப் போச்சாம். இளவரசிக்கும் சூரியனை பிடித்து விட்டுதாம். தினமும் விடியற்காலையில் எழுந்ததில இருந்து சூரியன் கிட்ட தான் பேசிட்டு இருப்பாளாம். சூரியனும் பூமிய சுத்திக்கிட்டே இளவரசியிடம் பேசிக் கொண்டே இருந்ததாம். இருவரும் ரொம்ப நல்ல நண்பர்களாக மாறிவிட்டாங்களாம். ஒரு நாள் சூரியன் இந்த இளவரசிக்கு பரிசு கொடுக்க நினைத்தாராம். சூரியன் கிட்ட வரைக்கும் காக்கா பறந்தது இல்லையா? அதனால சூரியன் ஒரு காக்காவைக் கூப்பிட்டு பையிலை சந்தனம், வாசனை திரவியங்கள், முத்து மாலை எல்லாம் கொடுத்து இளவரசியிடம் கொடு என்று சொல்லி விட்டு மறைந்து போச்சுதாம். மாலை ஆகிவிட்டால் சூரியன் தூங்க போயிடும் இல்லையா? காக்கா அந்த பையைத் தூக்கிகிட்டு இளவரசி இருந்த அரண்மனைய நோக்கிப் பறந்து போய்க் கொண்டு இருந்ததாம்.

வழியில திருமண ஊர்வலம் போய்க் கொண்டு இருந்ததாம். நிறைய பழங்கள், உணவுப்பொருள்கள் எடுத்துக் கொண்டு போனார்கள் போல. காக்காவுக்கு கொஞ்ச உணவு என்றாலும் கிடைக்கும் என்று ஆசை. அரண்மனைக்கு போட்டு வந்தா தாமதமாகிப் போகும் சரி என்று அந்த பையை ஒரு மரத்தில வைத்துவிட்டு திருமண ஊர்வலத்துக்கு போனதாம். மரத்துக்கு கீழ இருந்த ஒருத்தன் இந்த காக்கா பையை வைத்து விட்டுப் போனதைப் பாத்துக் கொண்டே இருந்தானாம். நல்ல வாசனை வந்தது. அதனால் மரத்தில் ஏறி பையைத் திறந்து பார்த்து இருக்கிறான். பைக்கு உள்ள சூரியன் கொடுத்து அனுப்பின எல்லாப் பொருளையும் பார்த்துச் சொக்கிப் போனானாம். உடனே எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு மரத்தில் இருந்த குப்பை எல்லாம் பையில எடுத்துப் போட்டுக் கொண்டு சென்று விட்டான்.

காக்கா நல்லா சாப்பிட்டு விட்டு வந்ததாம். பையை எடுத்துக் கொண்டு இளவரசி அரண்மனைக்கு போனதாம். அங்க இளவரசியிடம் சூரியன் கொடுத்த பையை கொடுத்ததாம். திறந்து பார்த்த இளவரசிக்கு அதிர்ச்சி. ச்ச.. இந்த சூரியன் ஏன் இப்படி செய்திச்சுது. என் மேல் அன்பே இல்லை. எல்லாம் நடிப்பு. அவன் பேச்சு இனிமேல் சொல்லிட்டு பையை வீசி விட்டுதாம்.

மறுநாள் காலை, சந்தோஷமா இளவரசியைப் பார்க்கலாம் என்று வந்த சூரியனுக்கு தூக்கி வாரி போட்டுதாம். அந்த பை கீழ விழுந்திருந்ததைப் பாத்தே ஏதோ தப்பு நடந்திருக்குதுன்னு புரிஞ்சிடுச்சாம். பயங்கர கோபம் வந்திட்டுதாம். காக்காவைப் பார்த்து கோவமாகப் பார்த்த உடனே வெள்ளையாக இருந்த காக்கா கறுப்பா மாறிவிட்டதாம். அதனால தான் சூரியன் கிட்டகூட பறக்க முடியாமல் போச்சுதாம். கிட்ட இருந்த சூரியனும் பூமி மேல கோபம் வந்து தூரமா போய் விட்டதாம்.

இப்ப தெரியுமா காக்கா ஏன் காக்கா கறுப்பாகியது என்று?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேறிய விருப்பம்

அஜித்துடன் எப்படியாவது ஜோடி சேர்ந்துவிட வேண்டும் என்று தீயாக முயன்று கொண்டிருந்த சமந்தாவுக்கு அடித்திருக்கிறது யோகம். 'சிறுத்தை' சிவா இயக்கும் படத்தில் அஜித்தின் ஜோடி சமந்தாதான் என்கிறார்கள். 'என்னை அறிந்தால்" படத்தைத் தொடர்ந்து சிவாவின் இயக்கத்தில் பெயரிடப்படாத படமொன்றில் அஜித்குமார் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இந்தப் படத்திலேயே அஜித்துக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார் சமந்தா . அண்மைக்காலமாக ஊடகங் களிடம் 'சு ஒரு படத்திலாவது அஜித்தோடு நடிக்கவேண்டும்"" என்று சமந்தா விருப்பம் தெரிவித்திருந்தார். அந்த விருப்பம் இவ்வளவு விரைவாக நிறைவேறி விட்டது.



புலி

இரண்ட

# அப்பாடா!

பிரிந்த காதல் ஜோடி சிம்பு நயன்தாராவை ஜோடியாக்கிப் படம் எடுத்தால் பெரிய வெற்றி ஆகும் என்று கணக்கு போட்டார் இயக்குநர் பாண்டிராஜ். ஆனால் நடந்ததோ வேறு. நாள்கள் போகப்போக, படம் முடிந்தால் போதும் என்ற நிலைக்கு ஆளாக்கிவிட்டார்கள். ஒரு வழியாக பொங்கல் தினத்தில் படத்தின் முன்னோட்டத்தை வெளியிட இருக்கிறார்கள்.

ஆரஞ்சு மிட்டாய் படத்
தயாரிக்கும் படம் 'மேற்
இயக்கும் இந்தப் படத்




# நட்புக்கு மரியாதை

கலகலப்பான நடிகர் என அனைவராலும் அழைக்கப்படுபவர் ஆர்யா. இவரது நடிப்பில் சமீபத்தில் திரைக்கு வந்த மீகாமன் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.இந்த நிலையில் ஒரு பேட்டியில் நயன்தாராவுடன் காதலா? என்று கேட்டுள்ளனர் அதற்கு அவர் நயன் எப்போதும் என்னுடைய நண்பர் மட்டுமே, அவருடன் நட்பாக மட்டுமே பழகி வருகிறேன்.மேலும் நட்புக்கு அவர் மிகவும் மரியாதை கொடுப்பவர், நயனுடன் நான் பேசி னால் உங்களுக்கு என்ன? என்று கொஞ்சம் கோபமாகவே பதில் அளித்துள்ளார்.

# கருப்பான விஜய்

சூர்யாவின் மாஸ் கை நழுவியதில் கவலையாக இருந்த எமி ஜாக்சன், இப்போ தனுஷ், உதயநிதி படங்களின் நாயகன். உதயநிதியின் 'கெத்து" படத்தில் தாவணி கட்டிய கிராமத்து தமிழ்ப் பெண் வேடமாம்.



# இன்னொரு அஞ்சாதே

மிஷ்கின் அடுத்த படம் ஆரம்பிக்கிறார். சரத்குமார் நாயகனாக நடிக்க, அஞ்சாதே பாணியில் அழுத்தமான ஆக்ஷன் படமாம். இந்தப் படத்துக்கு இளையராஜா இசை அமைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...க்கு நன்றி



ஒரு வழியாக சிம்பு தேவன் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்துக்கு பெயர் வைத்து விட்டார்கள். 'புலி" என்பதே விஜய்யின் புதுப்படத்தின் பெயர். இந்தப் படத்தின் பெயரை ஏற்கனவே எஸ்.ஜே. சூர்யா பதிவு செய்து வைத்திருந்தார். அந்தப் படத்திலும் விஜய் தான் நடிப்பதாக இருந்தது. ஆனால் சில காரணங்களால் அந்தப் படம் கைவிடப்பட்டிருந்தது. இப்போது புதிய படத்துக்கு புலி என்ற பெயரை வைக்க மனதுவந்து அனுமதி கொடுத்திருக்கிறார் எஸ். ஜே. சூர்யா. இதனால் அவருக்கு தனிப்பட்ட ரீதியில் தனது நன்றியை விஜய் சொல்லியிருக்கிறார்.

சில்லுனு ஒரு காதல்" படத்துக்குப் பிறகு சூர்யா நடிக்கும் '24' படத்துக்கு இசையமைக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான். படத்தை இயக்குவது 'யாவரும் நலம்" விக்ரம் குமார். முன்பே விக்ரமுக்கு சொல்லி, அவர் நடிக்க மறுத்த கதைதான் இந்த '24'

## சூர்யாவின் 24



## ...டாவது தயாரிப்பு

...டத்தைத் தொடர்ந்து விஜய் சேதுபதி ...ற்குத் தொடர்ச்சி மலை" லெனின் பாரதி ...ந்துக்கு இசையமைக்கிறார் இளையராஜா.

## ...றந்தது கவலை

சூர்யாவின் மாஸ் கை நழுவியதில் கவலையாக இருந்த எமி ஜாக்சன், இப்போ தனுஷ், உதயநிதி படங்களின் நாயகன். உதயநிதியின் 'கெத்து' படத்தில் தாவணி கட்டிய கிராமத்து தமிழ்ப் பெண் வேடமாம்.

## ஐ க்கு தடை?

ஐ படத்தை இந்திய சினிமாவே எதிர்பார்த்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் சமீபத்தில் வந்த தகவல் ஒன்று ரசிகர்களுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது.பிக்சர் மீடியா ஹவுஸ் நிறுவனம் இந்தப்படத்துக்கு எதிராக தொடர்ந்து புகார் கொடுத்து வந்தனர். இதில் வாங்கிய கடனை ஆஸ்கர் ரவிச்சந்திரன் திருப்பிச்செலுத்தவில்லை என மனுவில் புகார் தெரிவித்துள்ளனர். பணத்தை திருப்பி தராததால் படத்தை வெளியிட தடை விதிக்குமாறு கோரிக்கைவிடுத்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜனவரி ௩0க்குள் ரவிச்சந்திரன் பதில் தருமாறு கூறியுள்ளார்.

ஓகே கண்மணி படத்தை அடுத்து மணிரத்னம் இயக்க இருக்கும் தமிழ் மற்றும் இந்திப் படத்தில் நாயகன் தனுஷ். நாயகியாக ஹிந்திப்பட அழகி அலியா பட்டைக் களமிறக்க இருக்கிறார் மணிரத்னம்.

## தனுஷோடு மணிரத்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய புன்னகையோன்

- சமரன்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

படைப்பிரிவின் உருவாக்கமோ ஏதும் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில்தான் 1993 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளார்ந்த ரீதியாக ஒரு மிகப்பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்த நிலையில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளராக தமிழ்ச்செல்வன் நியமிக்கப்பட்டார்.

செவ்வனே மக்கள் மத்தியில் கொண்டு சென்று மக்கள் ஆதரவுத் தளத்தைக் கட்டியெழுப்பும் பணியை ஆற்றுவது மிகக் கடினமான ஒரு பணியாகும்.

தொடர்ச்சியான போர் நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் மக்களிடையே இந்தப் பணியை ஆற்றுவதென்பது மிகப் பெரும் சிரமத்தைக் கொண்டது. ஆயினும் இதனைப் பல்வேறு

பொறுத்த வரையில் சுமார் ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஒரே இரவில் இடம்பெயர்ந்த சூழ்நிலையில் அதற்கு முகம் கொடுத்து வன்னியை நோக்கி இடம்பெயர்ந்த மக்களின் இருப்புக்கு வழிகோலியது அவரது அரசியற்பணிக் காலத்தில் ஈட்டிய மிகப்பெரும் சாதனையாக நோக்கத்தக்கது.

தடுத்துக் கொண்டிருந்த நிலையில் எட்டக்கூடிய அனைத்து வளங்களையும் ஒன்றுதிரட்டி இலங்கையை விஞ்சும் அளவுக்கு செயல்பூர்வமாக அதனை எதிர்கொண்டமையானது அனைத்துலக சமூகத்தின் கவனத்தை ஈர்த்தமைக்குக்

**ஒரு விடுதலை இயக்கத்தின் இலட்சியம், கொள்கை என்பவற்றை செவ்வனே மக்கள் மத்தியில் கொண்டு சென்று மக்கள் ஆதரவுத் தளத்தைக் கட்டி யெழுப்பும் பணியை ஆற்றுவது மிகக் கடினமான ஒரு பணியாகும்.**



படைத்துறை ரீதியாக களங்களை வழிநடத்திய ஒருவர் ஒரு விடுதலை இயக்கத்தின் கடினம் மிக்க அரசியற் பணியை ஆற்றும் பொறுப்பையேற்றார்.


இவரது அரசியற்பணியானது இவர் அரசியல்துறைப் பொறுப்பாளராக பொறுப்பேற்ற 1993 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி பல்வேறு வகையிலும் முதன்மை பெற்றதாகவுள்ளது.

ஏனெனில் உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமும் சந்தித்திராத மிகப்பெரும் நெருக்கடிகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் முகங்கொடுத்துக் கொண்டிருந்த நிலையில் அரசியற்பணியை முன்னெடுக்க வேண்டிய சூழமைவு அவருக்குக் காணப்பட்டது.

இந்த நிலையிலும் அவர் நெருக்குவாரங்களுக்கு மிடையே அவர் முன்கொண்டு சென்றார்.

விடுதலை அமைப்பின் கொள்கையை முன்னெடுப்பது, மக்களை அணிதிரட்டுவது, விடுதலை இயக்கத்துக்கு எதிரான அனைத்துலகத்தின் இராஜதந்திர சமர்களுக்கு முகம் கொடுக்கின்ற அதேவேளை இலட்சியத்தின் மீது மக்களைத் தொடர்ந்து உறுதி கொள்ளச் செய்வது என்பவற்றோடு ஒரு நடைமுறை அரசுக்கான கட்டுமானங்களை உருவாக்கும் தலைமையின் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுப்பது எனப் பரந்துபட்ட வேலைத்திட்டங்களை அவர் முன்னெடுக்க வேண்டியிருந்தது.

இத்தகையதொரு நிலையிலும் அரசியல்துறைக்கான சிவில் கட்டமைப்புக்கள் குலையாது அவற்றின் மீள் எழுச்சிக்கு பாடுபட்டமையானது முதன்மை மிக்க செயற்பாடாகும். இதேபோன்றுதான் 2004 ஆம் ஆண்டு தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தோனேசியாவின் சுமாத்திரா ஜாவா கடற்பரப்பில் ஏற்பட்ட நிலவதிர்வு காரணமாக கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட ஆழிப்பேரலை



நெருக்கடிமிக்க பல செயற்றிட்டங்களைச் சீர்செய்யும் வகையிலான வேலைத்திட்டங்களுக்கு தலைமை தாங்க வேண்டியிருந்ததுடன் அதனை வெற்றிகரமாகவும் செயற்படுத்தினார்.

இப்பணியைஇரண்டு வகையில் நோக்கலாம்.

1. இராஜதந்திரத் தளம்
2. மக்களின் தளம்.

ஒரு விடுதலை இயக்கத்தின் இலட்சியம், கொள்கை என்பவற்றை

ஆயினும் இந்தக்காலப்பகுதியில் இவர் ஒரு மிகப் பெரும் போர் இடப்பெயர்வு நெருக்கடிக்கும், இயற்கை அழிவுகளுக்கும் முகம் கொடுத்த மக்களின் புனர்வாழ்வு அபிவிருத்தி, மீள்குடியேற்றம் என்ற வாழ்வியல் நெருக்கடிகளையும் வெற்றிகரமாகக் கையாண்டார்.

2.யாழ்ப்பாண இடப்பெயர்வு.

4. சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம்.

யாழ்ப்பாண இடப்பெயர்வைப்

அழிவிலிருந்து மக்களை துரிதகதியில் மீள்நிலைக்குக் கொண்டுவரும் செயற்றிட்டம் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டபோது அதனை வெற்றிகரமாக செயற்படுத்தி அனைத்துலக சமூகத்தின் பாராட்டுதலையும், கவனத்தையும் தாயகத்தை நோக்கி ஈர்த்தார் தமிழ்ச்செல்வன்.

அனைத்துலகத்தின் உதவிகள் முழுமையாக தமிழ் மக்களுக்கு வந்தடைவதை இலங்கை அரசு

காரணமாக இருந்தது!

இந்தச்செயற்றிட்டமானது பாதிக்கப்பட்ட மக்களை துரிதகதியில் இயல்பு நிலைக்கு கொண்டுவர மிகவும் பயனுடையதாக அமைந்திருந்தது.

இது தமிழ்ச்செல்வனின் அரசியற்பணியில் மக்களின் தளத்தில் அவர் ஆற்றிய மகத்தான பணியாக அமைந்தது என்றால் மிகையாகாது.

இதேவேளை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இவரது இராஜதந்திரப் பணி வித்தியாசமானதாகும்.

அரசுகளுக்கிடையான இறுக்கமான பிணைப்பினூடாக முன்னெடுக்கப்பட்டு வரும் இராஜீக உறவுகளுக்கு நடுவே விடுதலை அமைப்பொன்றின் புரட்சிகர அரசியலை அனைத்துலக நாடுகளின் ஒத்திசைவுப் போக்கின் நடுவே முன்கொண்டு செல்லுதல் என்பது ஒரு கடினமான பணியாகும்.

விட்டுக் கொடுப்புக்கள் என்ற பேரிலும் இணைந்து செயற்படுதல் என்ற கோதாவிலும் ஒரு விடுதலை அமைப்பை அரசியல் நீரோட்டத்துக்குள் கொண்டுவருதல் என்ற புனிதம் கெட்ட இராஜதந்திர வலைப் பொறிக்குள் வீழ்த்திவிட முயலும் அனைத்துலக இராஜதந்திர முயற்சிகளுக்கு ஈடு கொடுத்து இலட்சியத்தையும், தலைமையின் முடிவுகளையும் பாதுகாக்கின்ற இராஜதந்திரப் பாத்திரத்தை தமிழ்ச்செல்வன் ஏற்றிருந்தார்.

அனைத்துலக சமூகமானது அனைத்துலக ரீதியாக குருட்டுத்தனப் பார்வையூடாக எல்லா இனங்களின் போராட்டங்கள் மற்றும் முன்னெடுப்புக்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்த முனைந்து வரும் இன்றைய உலக யதார்த்தத்தில் ஒரு புரட்சிகர இராஜதந்திரப் பணியை தமிழ்ச்செல்வன் மேற்கொண்டிருந்தார்.

சமாதானம் அடிமைகளை உருவாக்குகிறதென்றால் அதற்குச் சுதந்திரத்தை சாகடிக்கும் வல்லமை இருப்பதானாலேயேயாகும்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதவை

முற்றுப் பெறாத வாக்கியத்தில்
இடையில் ஓர் முற்றுப் புள்ளியா?
முற்றுப் புள்ளி இடப்பட்டதால்
முடிந்து போனதா இவள் வாழ்வு.

கல் நெஞ்சக்காரன்
காலனவன் பிடியில்
கணவனை கொடுத்து விட்டு
கண்ணீரை வைத்திருக்கும் அபலை
இவளா?

அடிமை சாசனத்தில்
அடிமையின் வாழ்வு போல்
சமூக சதிகாரர் மத்தியில்
மொழியில்லா மௌனம் இவளா?

அழகிய பட்டுருக்கும் மென் தேகத்தில்
வெள்ளைப் புடவை தஞ்சம்
கொண்டதோ?
கருநிற மை தீட்டும் கருவிழியில்
கண்ணீர் மட்டும் எஞ்சியதோ?

அடக்குமுறை சமூகம்
வஞ்சித்து ஒதுக்கி விட்டால்
எண்ணாதே - நீ
வாழ்வு முடிந்தது என்று

குடத்துள் மூடிய ஒளிவிளக்காக
குன்றியே நிதமும் இருக்காதே
உன் உரிமையை தேடிச் செல்
நிச்சயம் ஓர் நாள்
வெற்றியை அடைவாய்

-மன்னியூர் சோபா,
விசுவமடு.



# கவிதைப்புனல்

## வீழ்ச்சியும் எழுச்சியும்

விதையின் வீழ்ச்சி
இன்னொரு மரமாகிறது

அருவியின் வீழ்ச்சி
அழகிய நதியாகிறது

மழையின் வீழ்ச்சி
புவியின் பசுமையாகிறது

காவோலையின் வீழ்ச்சி
குடிசைக்கு கூரையாகிறது

சூரியக்கதிரின் வீழ்ச்சி
இருள் விலகி விடியலாகிறது

மூங்கிலின் வீழ்ச்சி
இசை மீட்டும் புல்லாங்குழலாகிறது

அப்பிளின் வீழ்ச்சி
நியூட்டனின் விதியாகியது

உனது வீழ்ச்சியை
விதியென்று எண்ணாதே

பந்து விழுகின்ற வரிசையில் தான்
மீண்டும் மேலே எழுகின்றது

கீழே விழும் போது தான்
எழுகின்ற எண்ணம் தோன்றுகிறது

எத்தனை முறை விழுந்தோம்
என்பது சோதனையல்ல

எத்தனை முறை எழுந்தோம்
என்பதே சாதனை

-அ. அஜந்தன்,
[illegible]

## வரம் தர வருக!

தை மக்கள் வருக
தமிழர் போற்றும் திருமகளே வருக
விதை போட்ட விவசாயி
விளைச்சல் காண மகிழ்ந்து
நிற்கும் வேளை
உதித்தவளே வருக வருக


பசித்தவர்க்குணவளிக்கும்
பண்பு சேர் உழவர் குலம்
சிரித்து மகிழ்ந்திட
உதித்தவளே வருக வருக

சரித்திரத்தில் உழவர் குலப்
பெருமைதனைப் பறைசாற்ற
மறந்த தமிழர் இனத்துக்கு
மங்காப் புகழ் சேர்த்தவனே வருக

இயற்கையின் அனர்த்தத்தால்
இடர்சூழ்ந்த நம் வாழ்வில்
விடிவெள்ளியாக வந்தெம்
வேதனைகள் நீக்க வருக வருக

புதுப்பானை தன்னில் பொங்கிவிட்டு
புலர்ந்துவரும் பரிதிக்கு படைய விட்டு
வரம் தந்து எம் இனத்தை வளமாக்க
வேண்டுமென்று
வணங்கித் துதி பாடுகின்றோம் வருக வருக

முல்லை மாயவதாசன்.



## நம்பிக்கை மட்டும்

ஆத்தக வெறியாகள
சமாதானப் பிரியர்கள்
சுதந்திர மனிதர்கள்
இன வெறியர்கள்!

வேடங்கள் போடும்
மானிட நடிகர்கள்
உலகம் காணும்
உண்மைப் புனிதர்கள்!

கண்களை பிடுங்கி விட்டு
குருடன் பட்டம்
மறுத்து வழக்கு
தொடுத்தால்
மரணம் தான் கிட்டும்!

குருட்டுச் சட்டமும்
இருட்டு நீதிம்
மாறும் காலம் பாரில்
தோன்றும்!

காலம் வரும்
நல்ல வாழ்வும் வரும்
பாகுபாடுகள்
பாரில் ஒழியும்!

காலம் மாறும் என்றும்
நல்வாழ்வு கூடும்
என்றும்
நம்பிக்கை மட்டுமே
நமக்கு மிச்சம்!

-மிகிந்தலை ர.பாரிஸ்,
கட்டுக்கெலியால.

## இறப்பின் இறுதி வலி

மறுஜென்மம்
என்பது உண்மையெனில்
மரணத்திலும்
மண்டியிட்டுக் கேட்கிறேன்
இன்னொரு ஜென்மத்திலும்
மானிடப்பிறப்பு மட்டுமல்ல
வேறெந்தப் பிறப்புமே வேண்டாம்
பிறந்து விட்ட இந்தப் பிறப்பிலேயே
வலிகள் தந்த
விழி கசிவுகள்- என்
இறப்பின் இறுதி நிமிஷத்தோடு
விடைபெற்றுப் போகட்டும்

-வேல்மகள்,
புளியம்பொக்கணை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்கள் தலைப்புச் செய்திகளாக்கப்படுவது எப்போது?

- காலீத் இ பெய்தூன்
தமிழில்: பூ.கொ.சரவணன்



பிரான்ஸ் அங்கத இதழான 'சார்லி ஹெப்டோ'வை குறிவைத்துத் தீவிரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலில் கொல்லப்பட்ட முதல் நபர் அப்பாவியான அகமது மெராபத். இந்தப் பத்திரிகையின் தலைமையகத்தில் அந்தப் பிரான்சிய இஸ்லாமியப் பொலிஸ்காரர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சார்லி ஹெப்டோ அலுவலகத்துக்குள் நுழைந்து ஆசிரியர் அற்புதமான கார்ட்டூனிஸ்ட்கள் ஆகியோரை கொல்வதற்குச் சில கணங்கள் முன்னால், மூன்று தீவிரவாதிகளில் ஒருவரால் துப்பாக்கி முனையில் மெராபத் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பரிஸ் துப்பாக்கிச் சூடு பற்றிய ஊடகங்களின் செய்திகள் எல்லாம் ஸ்டேபானே சார்போன்னியர், ஜார்ஜஸ் வோலின்ஸ்கி, மூான் காபுட், பெர்னார்ட் வெர்ல்ஹாக் என்று சார்லி ஹெப்டோ சம்பவத்தில் கொல்லப்பட்ட முக்கியமான சார்லி ஹெப்டோவை உருவாக்கிய மூளைகள் பற்றியே பேசின. முதல் பலியான அகமது மெராபத் தலைப்புச் செய்தியில் இருந்து தள்ளிவைக்கப்பட்டார்.

மெராபத் பாதிக்கப்பட்டதை முக்கியத்துவப்படுத்துவதைத் தவிர்க்கிற அரசியல், பிரதிநிதித்துவ அரசியல்களை மறுக்க முடியாது.

மெராபத்தின் மரணம் இஸ்லாமியர்களைத் தீவிரவாதிகள், அயலர்கள், விளிம்பு நிலையில் உள்ளவர்கள் என்று இறுக்கமாகக் காட்டும் பரவலான பார்வையைச் சிக்கலாக மாற்றுகிறது. அரசாங்கம், பிரான்சில் உள்ள இஸ்லாமியர்களை அழிவை உண்டு செய்பவர்களாகச் சட்டத்தை மதிக்காதவர்களைக் காட்டிய பார்வையை மறுக்கிறது.

இந்தத் துக்ககரமான சம்பவத்தைத் தாண்டி, சார்லி ஹெப்டோ படுகொலைகள் அடிப்படையைச் சுட்டுகின்ற, இஸ்லாமிய அடையாளமே முக்கியம். அது தலைப்புச் செய்தியாகத் துப்பாக்கியை ஏந்தி நிற்பவர் இஸ்லாமியராக இருக்கிறபோது மாறும். அந்தத் துப்பாக்கியை எதிர்கொள்ளும் அப்பாவியாக இஸ்லாமியர் இருக்கிறபோது அந்தச் செய்தி கண்டுகொள்ளப்படாது. இதுவே உலகில் பெரும்பாலும் நடக்கிறது. குறிப்பாக நவீன இஸ்லாமிய வெறுப்பின் சிற்பியான பிரான்ஸ் தேசமும் இதில் அடக்கம்.

பிரான்ஸ் மக்கள் தொகையில் இரண்டாவது பெரிய மதத்தினராக இஸ்லாமியர்கள் உள்ளார்கள். மொத்த அறுபத்தி ஆறு மில்லியனில் ஐந்து முதல் பத்துச் சதவிகிதம் பேர் இஸ்லாமியர்கள். இஸ்லாமின் அளவு, மக்கள்தொகை வளர்ச்சி ஆகியவை இஸ்லாமியர்களுக்கு எதிரான கடுமையான நவீன காலச் சட்டங்களைக் கொண்டுவந்தன. தலை முக்காட்டை 2004 இலும், 2010 இல் நிகாப் எனப்படும் முகத்தை மூடிக்கொள்ளும் முறையையும் இஸ்லாமிய வெறுப்புச் சிந்தனைகளால் அரசு தடை செய்தது. இஸ்லாமிய மற்றும் பிரான்சிய அடையாளங்கள் ஒன்றுக்கொன்று இணையவே முடியாது. அவற்றுக்குள் சமரசம் சாத்தியமில்லை என்பதை அறிவிப்பதாக அரசின் சட்டங்கள் செயற்பட்டன.

தன்னுடைய இஸ்லாமிய மக்களின் மீது கட்டாய மதச்சார்பின்மையைக் கொண்டுவந்து இருவகையான கலாசாரத் தேர்வைத் தந்தது. 'இஸ்லாமும், மேற்குலகும்', 'இஸ்லாமிய நிலம் அல்லது பிரான்ஸ்' என்பதே அவர்களுக்குத் தரப்பட்ட தேர்வு. இப்படிப்பட்ட காலக்கெடு அரசால் தரப்பட்டாலும் பிரான்ஸ் இஸ்லாமியர் கள், பிரான்ஸ் குடிமக்கள் என்பதையே முதன்மையாகக் கொண்டு செயற்பட்டார்கள்.

நாட்டின் முப்பது - அறுபது லட்சம் பிரான்ஸ் இஸ்லாமியர்களின் பிரதிநிதியாக இந்த மூன்று தீவிரவாதிகளை நாட்டின் சிவில் சமூகங்கள் தீவிரமான குரல்களாகக் கருதின. இந்த மாதிரியான பரப்புரைகள் அங்கு ஏற்கெனவே ஊறிப் போயுள்ள இஸ்லாமிய வெறுப்போடு இஸ்லாமியர்கள், இஸ்லாமிய சமூகங்கள் மீது வன்முறையை வளர்க்கவே பயன்படும்.

பிரான்ஸ் தேசத்தின் இஸ்லாமிய வெறுப்பு புதன் நிகழ்வுக்குப் பிறகு இன்னமும் தீவிரமாகவும், ஆழமாகவும் வளரும். மூன்று தீவிரவாதிகளின் செயல்கள், வெறுப்பை விரும்பும் நபர்களின் பார்வையில் இஸ்லாமியர்களை இன்னமும் பொறுப்பு கொண்டவர்களாக மாற்றியிருக்கிறது. இன்னமும் பல இஸ்லாமியர்கள் பாதிப்புக்கு உள்ளாகப் போகிறார்கள்.

வில்லன்களுக்குப் பதிலாக பாதிக்கப்பட்ட இஸ்லாமியர்களை முன்னிறுத்துவது வெறுப்பைப் பலமடங்கு தணிக்கும். மூன்று தீவிரவாதிகளைப் பற்றிச் செய்தி பரப்புவதை விட, மெராபத்தின் தீரமான போராட்டத்தை முன்னிறுத்திப் பேசுவது இஸ்லாமியர்கள் பிரான்ஸ் தேசத்தின் குடிமக்களே என்கிற கருத்தை பொருத்தமாக அழுத்திச் சொல்லும். அவர்கள் மற்றவர்களைப் போலச் சாதாரண வேலைகள் பார்க்கும், குடும்பங்களோடு அமைதியாக வாழும் நபர்கள் என்பதும், வன்முறையைக் கண்டிக்கும் இஸ்லாமை நம்புபவர்களே அவர்கள் என்பதும் மக்களுக்குப் புரியும். அரசாங்கம் உருவாக்கி வைத்திருக்கிற 'தீவிரமான பற்றுக் கொண்டவர்கள் அவர்கள்' என்கிற பிம்பத்தில் இருந்து மாறுபட்டதாக அது இருக்கும்.

அகமது மெராபத் பாதிக்கப்பட்ட ஒருவர். அவர் ஒரு இஸ்லாமியர் என்பதற்கும் மேலானவர். அவர் தன் வாழ்விலும், மரணத்திலும் பிரான்ஸ் தேசத்தின் பெரும்பான்மை இஸ்லாமியர்களின் மாதிரியாக இருந்துள்ளார். சட்டத்தை மதிக்கிற பிரான்ஸ் குடிமகனாக இருந்த மெராபத், தன்னுடைய இஸ்லாமிய அடையாளத்தை அரசின் சட்டங்களோடு இணக்கமாக மாற்றிக்கொண்டார். அ[illegible] நாட்டில் பரவலாக இருந்த இஸ்லாமிய வெறுப்புக்கு நடுவிலும் ஒரு பிரான்ஸ் குடிமகனாகவும், இஸ்லாமியராகவும் ஒரு சேர இருந்துள்ளார்.

தாக்குதலின் முதல் பலியான அகமது மெராபாத்தின் கதை தலைப்புச் செய்திகளில் தவிர்க்கப்படுகிறது. புதன்கிழமை முதல் பரிஸ் நகரில் இருந்து வரும் அறிக்கைகள், விவரணைகள் ஆகியவற்றில் அவரின் முகமோ, பெயரோ காணப்படவில்லை. அவரின் தீரம் மிகுந்த, பாதிக்கப்பட்ட நெகிழ்வான கதையைச் சொல்வது மேலும் பல உயிர்கள் கொல்லப்படுவதைத் தவிர்க்கும். மிக முக்கியமாக, அகமது மெராபத்தின் பார்வையில் கதையைச் சொல்வது இஸ்லாமிய அடையாளம், பிரான்சிய குடிமகன் அடையாளம் இரண்டும் இணைந்தும், உறுதியாகவும் இருக்க முடியும் என்பதை விளக்கும்.

## வெறும் அங்கதம் அல்ல

**சார்லி ஹெப்டோவின் அங்கதத்தால் பரிஸ் தீவிரவாதிகள் காயப்பட்டு உள்ளார்கள் என்று நம்புகிறோம். நாம் தவறாக எண்ணிக்கொண்டு இருக்கலாம்.**

**இது ஒரு கோட்பாடு. கேலிச்சித்திரங்களால் தீவிரவாதிகள் காயப்படுவது இல்லை. நபிகள் நாயகத்தைப் பகிடி செய்யும் கேலிச்சித்திரங்கள் கூட அவர்களைக் காயப்படுத்துவது இல்லை. அவர்களைப் பகிடிகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. எனக்குத் தெரிந்தவரையில் அவர்கள் நபிகள் நாயகத்தைப் பற்றியும் கவலைப்படுவதில்லை.**

**தாங்கள் கேலிச்சித்திரங்களால் காயப்படுவதாக அவர்கள் நடிக்கிறார்கள். படுகொலைகள் புரிவதற்கு அவர்களுக்குக் காரணங்கள் தேவைப்படுகின்றன. அவ்வளவுதான்!**

**படுபயங்கரமான அக்கொலைகள் மூலம் முஸ்லிம் அல்லாத மக்களைக் கோபம், வேதனைகொள்ள வைத்து, அவர்களின் வெறுப்பை இஸ்லாமியர்களை நோக்கி திருப்புவதுதான் இவர்களின் நோக்கம். அந்த மக்கள் இஸ்லாமியர்களைக் குறை சொல்லி, அவர்களைச் சித்திரவதை செய்ய வேண்டும் என்பது இவர்களின் இலக்கு. அம்மக்கள் இஸ்லாமியர்களின் நூலை எரிக்க வேண்டும், மசூதிகளைத் தாக்க வேண்டும், தெருக்களில் மிரட்டப்பட வேண்டும், அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அந்நியர்கள் போல ஆக வேண்டும். அவர்கள் ஆதரவைத் தேட வேண்டும். தீவிரவாதிகள் ஆகவேண்டும். விளைவு: தீவிரவாதிகள் எண்ணிக்கையில் பெருக்கி முஸ்லிம்கள் அல்லாத மக்களைக் ஒரு உள்நாட்டுப் போரை தொடங்கவைக்க வேண்டும்.**

**நம்முடைய கோபம் ததும்பும் அப்பாவித்தனத்தோடு இது கேலிச்சித்திரங்கள் தொடர்பானது என்று தொடர்ந்து நாம் எண்ணுகிறோம். நாம் கேலிச்சித்திரங்களை வரையாவிட்டால் தீவிரவாதிகள் வெல்கிறார்கள், வரைந்தால் தோற்கிறார்கள் என்று நாம் கருதுகிறோம். ஏராளமான ஐரோப்பிய செய்தித்தாள்களில் அந்தச் சர்ச்சைக்குரிய கேலிச்சித்திரங்கள் மீண்டும் அச்சிடப்பட்டுள்ளன. இதைக்கண்டு மேற்குலகில் உள்ள தீவிரவாதிகள் தனியாகக் கோபத்தில் கத்திக்கொண்டு இருக்கிறார்கள். (பெரிய விபத்து இது! பேனா போராளிகளைத் தோற்கடித்து இருக்கிறது. நம் திட்டம் திருப்பித் தாக்கியிருக்கிறது. அங்கதம் நம்மை மீண்டும் வீழ்த்தி அவமதித்து இருக்கிறது.) ஆனால், இதை என்னால் அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடியவில்லை. நாம் கேலிச்சித்திரங்களை மீண்டும் மீண்டும் வெளியிடாவிட்டால் தீவிரவாதிகள் வென்று விடுவதாக நான் எண்ணவில்லை. அவர்களின் தூண்டிலில் சிக்கி எகிறி குதித்து, முஸ்லிம்களை நாம் வெறுக்க ஆரம்பித்தாலே அவர்கள் ஜெயிக்கிறார்கள்.**

**இது வெறும் அங்கதம் அல்ல. அதற்குப் பலமடங்கு அதிகமான ஒன்று.**

- மைக்கேல் டீகான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல சகுனமா?

**- அனுஷ்கன்**

சர்வதேச அழுத்தங்கள் போர்க்குற்ற விசாரணைக்கான கோரிக்கைகள், பொருளாதார நெருக்கடிகள் என்பன இணைந்து நாட்டின் கழுத்தை இறுக்கும் மிக இக்கட்டான காலப்பகுதியில் இலங்கையின் ஆறாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மைத்திரி பால சிறிசேன இலங்கையின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்.

இந்த நிலையில் முன்னைய ஆட்சியாளர்களில் ஊழல்களால் காலியாகி போன கஜானாவை மீண்டும் நிரப்புதல், முட்டாள்தனமான வெளியுறவுக்கொள்கைகள் சர்வதிகார ஆட்சி முறை என்பவற்றால் சர்வதேச மட்டத்தில் நாறிப்போன இலங்கையின் நற்பெயரை மாற்றுதல் போன்ற சவால் மிகுந்த பாதைகளில் மைத்திரி பயணிக்க வேண்டும். அத்தோடு அவர் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை வழங்க வேண்டும் அல்லது வழங்க முற்படுவதாக காட்ட வேண்டும் .

ஏனென்றால் சிறுபான்மை மக்களின் வாக்குகளே அவரைப் பதவிக்கதிரைக்கு கொண்டு வந்தன என்பது மறுக்கப்பட முடியாதது. வடக்கு -கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளோடுஒப்பிடும் போது மஹிந்த ராஜபக்சவே மைத்திரியை விடவும் பல தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தார். ஆனால் வடக்கு - கிழக்கு மக்கள் கொடுத்த பேராதரவே மைத்திரியின் வெற்றிக்கான பிரதான காரணியாக பார்க்கப்படுகிறது.

எனவே தம் மீது நன்றி உணர்வோடு மைத்திரி செயற்படுவாரா என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடம் நிரம்பி இருக்கிறது. ஆனால் தமிழ் மக்களுக்குச் சாதகமாக மைத்திரி செயற்பட்டால் அவர் தென்னிலங்கை மதவாத பீடங்களின் எதிர்ப்புகளை சம்பாதிக்கவேண்டியிருக்கும் . தென்னிலங்கை மதவாத அமைப்புகளை திருப்தி படுத்தும் அதேசமயத்தில் தமிழ் மக்களுக்குச் சாதகமான தீர்வினையும் முன்வைக்க வேண்டிய சிக்கல் மைத்திரிக்கு எழுந்துள்ளது. பாலுக்கும் காவல்.பூனைக்கும் தோழன். இதுவே மைத்திரியின் இப்போதைய நிலை.

மைத்திரிபாலவின் ஆரம்ப ஆட்டம் சிறுபான்மை மக்களுக்கு தமக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை இன்னும் அதிகமாக்கியிருக்கிறது. அவர் ஜனாதிபதியான முதல் நாளே தென்னிலங்கை மட்டத்தில் இருந்து சில நல்லெண்ண சமிக்ஞைகள் வெளியாகியிருக்கின்றன. மைத்திரிபால வெற்றி பெற்ற செய்தி முதலில் தமிழ் மொழியிலேயே அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை பிரதித் தேர்தல் ஆணையாளர் மொஹமட் வெளியிட்டிருந்தார். இதன் பின்னரே தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய சிங்கள மொழியில் மைத்திரியின் வெற்றிச் செய்தியைச் சொன்னார்.

இதைவிட இன்னொரு அதிசயமும் நடந்தது. இலங்கை வரலாற்றில்



ஊளிமையான -செலவுகுறைந்த- முறையில் மைத்திரிபாலவின் பதவியேற்பு நிகழ்வு நடந்து முடிந்தது. இந்த பதவியேற்பு கூட இலங்கையின் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் முன்னிலையில் நடைபெறாமல் தமிழ் நீதியரசரும் யாழ்ப்பாணம் இருபாலையைச் சொந்த இடமாகமாகக் கொண்டவருமான உயர் நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீபவன் முன்னிலையில் நடந்தேறியது.

அதன் பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்திய மைத்திரி, கூட்டமைப்பினர் முன்வைத்த சில கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலிப்பதாகக் கூறியிருப்பதும் வரவேற்கப்பட வேண்டிய விடயமே. அதிலும் குறிப்பாக வட மாகாண ஆளுநர் மாற்றம், உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு போன்ற விடயங்களில் மைத்திரி அக்கறை காட்டுவார் என்று கூட்டமைப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது. உண்மையாகவே வடமாகாண ஆளுநரையும் மாற்றி, இடம்பெயர்ந்த மக்களையும் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மீள்குடியேற்றினால் தமிழர்களுக்கு நல்லதொரு ஆரம்பப்புள்ளியாக அமையும்.

# தொடங்கப் போகும் கிரிக்கெட் உலகப்போர்

**- கோகுல்**

பல சுவாரஷ்யமான மாற்றங்களைச் சுமந்து வரும் இந்த ஆண்டில் அடுத்த மாதம் 14 ஆம் திகதி உலகக்கிண்ணக் கிரிக்கெட் பெரும் போர் ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் விளையாடவுள்ள பதின்நான்கு அணிகளும் தமது 15 வீரர்கள் கொண்ட பெயர் விபரங்களை வெளியிட்டுள்ளன.

இந்தப் போரில் விளையாடுவதற்காக ஒவ்வொரு நாடுகளும் தங்கள் அணிக்கு எந்த வீரரை தேர்வு செய்வது? யாரைக் கழற்றி விடுவது? என்ற சிக்கலில் தவித்து அப்பாடி என்று பெருமூச்சு விட்டவாறு வீரர் தேர்வுகளை முடித்து ஓய்வாகியுள்ளன.

ஆனாலும் இவர்களின் தேர்வில் பல மூத்த வீரர்கள் அணியில் இருந்து தூக்கி ஏறியப்பட்டதுடன் பல இளம் வீரர்கள் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இதில் பழிவாங்கல்கள் ஒருபுறம் இடம் பெற்றிருந்தாலும் திறமையான வர்கள் அணிகளுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்றால் மிகையாகாது.

ஒருவாறு அணி வீரர் தெரிவுகளை நிறைவுசெய்து நியூசிலாந்து-ஆஸ்திரேலியா இணைந்து நடத்தும் உலககிண்ணப் போரில் யார் யார் எந்த அணிகளுடன் மோதுவது என்ற போட்டி அட்டவணையும் வெளியாகியுள்ளது.

அதில் ஏ பிரிவில் மோதுவதற்காக கடந்த காலங்களில் மிகச்சிறப்பாக செயற்பட்ட இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இலங்கை, நியுசிலாந்து ஆகிய அணிகளுடன் பங்களதேஷ், ஆப்கானிஸ்தான், ஸ்கொட்லாண்ட் அணிகள் தெரிவாகியுள்ளதுடன் பி பிரிவில் தென்னாபிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியதீவுகள் என நான்கு சிறந்த அணிகளுடன் சிம்பாப்பே, அயர்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய அணிகள் தெரிவாகியுள்ளன.

இந்த உலகக்கிண்ண போட்டிகளும் ஐ.பி.எல் போட்டிகளை போன்று ஆங்காங்கே சூதாட்டங்களுக்கும் குறைவிருக்காது.

அதுமட்டுமல்லாது இந்தியா-பாகிஸ்தான் மோத உள்ள போட்டியை உலகமெங்கும் உள்ள பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் கண்டுகளிக்க ஆர்வமுடன் உள்ளார்கள்

இந்த போட்டி ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்த மூன்று காரணங்கள் உள்ளன.

முதலாவது அனைவருக்கும் தெரிந்தது போலவே, எதிரி நாடுகளான இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டிக்கான எதிர்பார்ப்பு, இரண்டாவதாக இது உலகக்கிண்ணப் போட்டி என்பதால் இரு அணிகளும் தமது பகைமையை போக்கிக்கொள்ள சிறப்பாக செயற்படுவார்கள் மூன்றாவது முக்கிய காரணம், இவ்விரு அணிகளும் சமீபத்தில் எந்த வொரு போட்டிகளிலும் விளையாடவில்லை என்பதால் விறுவிறுப்புக்கும் பஞ்சமிருக்காது.

அதுமட்டுமல்லாது உலகக் கிண்ணப் போட்டிகளில், பாகிஸ்தான் இதுவரை இந்தியாவை வென்ற வரலாறு கிடையாது. 1992 ஆம் ஆண்டு முதல் இந்த இரு அணிகளும் உலகக்கிண்ணப் போட்டிகளில் 5 முறை மோதிக்கொள்ளும் வாய்ப்பை பெற்றிருந்தபோதிலும், இந்தியாவே அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக கடந்த 2011 ஆம் ஆண்டு மொகாலியில் நடந்த அரையிறுதி போட்டியில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதின. அதில் இந்தியா வென்று இறுதி போட்டிக்குள் சென்றது. அந்த போட்டியை உலகெங்கிலும் 988 மில்லியன் ரசிகர்கள் கண்டு களித்திருந்தனர்.

அதனால் இம்முறை அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள உலக கிண்ண போட்டியில் இந்தியா-பாகிஸ்தான் மோதும் போட்டியை 1 பில்லியனுக்கும் மேற்பட்ட ரசிகர்கள் கண்டுகளிக்க வாய்ப்புள்ளது.

காரணம் இரு அணிகளும் மோதும் போட்டி பெப்ரவரி 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் உலகெங்கிலும் உள்ள ரசிகர்கள் தொலைக்காட்சிகளில் போட்டியை பார்ப்போர் எண்ணிக்கை கட்டாயம் 1 பில்லியனை தாண்டுவதற்கு சந்தர்பங்கள் அதிகமாகவுள்ளதால் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு கிரிக்கெட் போட்டியை அதிகம் ரசிகர்கள் பார்த்த சாதனையை இந்த போட்டி நிகழ்த்த வாய்ப்பு உள்ளதுடன் இது அவுஸ்திரேலிய கிரிக்கெட் வரலாற்றிலேயே அதிகம் பேர் பார்க்கப்போகும் போட்டி இதுவாகத்தான் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார இராசி பலன்

**14.01.2015 ~20.01.2015**

### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

**மேஷம்**

உங்கள் ராசி நாதன் செவ்வாய், லாப ஸ்தானத்தில் அனுகூலமாக உள்ளார். புதன், ராகு நற்பலன் வழங்குவர். குடும்பத் தேவையை நிறைவேற்ற, தாராள அளவில் பண வரவு கிடைக்கும். மனதில் உத்வேகமும், செயல்களில் பரிமளிப்பும் உருவாகும். எதிர்ப்பு விலகி, முன்னேற்றப் பாதை எதுவென புலப்படும். உடன் பிறந்தவர்களின் உதவி உண்டு. வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர் மனதில் நம்பிக்கை வளர, இதமாக அறிவுரை சொல்வீர்கள். இல்லறத் துணையிடம், கருத்து வேறுபாடு வராத அளவில் அன்பு பாராட்டுங்கள். தொழிலில் உருவாகிற வளர்ச்சியை கவனமுடன் பாதுகாக்கவும். பணியாளர்களுக்கு, ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள், கணவரின் வாழ்வியல் சூழ்நிலையை உணர்ந்து நடந்து கொள்ளவும். மாணவர்கள், ஆசிரியர் வாழ்த்தும் வகையில் படிப்பில் கவனம் கொள்வீர்கள்.

### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

**ரிஷபம்**

உங்கள் ராசிக்கு, ஒன்பதாம் இடத்தில் உள்ள சுக்கிரன், 11ல் உள்ள கேது நற்பலன் தருவர். நண்பர், உறவினர்களிடம் பெற்ற நற்பெயரை பாதுகாப்பதில் அக்கறை கொள்வீர்கள். அரசு தொடர்பான அனுகூலம் பெறுவதில் தாமதம் இருக்கும். புத்திரரின் சேர்க்கை, சகவாசம் உணர்ந்து, அவர்கள் நல்வழியில் செயல்பட உதவுங்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்ள அழைப்பு வரும். இல்லறத் துணை, உங்களின் நல்ல குணம் பற்றி உறவினர்களிடம் சொல்லி பெருமிதம் கொள்வார். கூடுதல் உழைப்பினால் தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய முடியும். பணியாளர்கள், அதிக பொறுப்பு உணர்வுடன் பணிபுரிய வேண்டும். பெண்கள், குடும்பத்தின் முக்கிய தேவைக்கு மட்டும் பணம் செலவு செய்வது நல்லது. மாணவர்கள், உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம்.

### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**மிதுனம்**

உங்கள் ராசிக்கு குடும்பம், பண வரவு ஸ்தானத்தில் உச்ச பலத்துடன் குரு உள்ளார். சனி, சுக்கிரன், புதன் கூடுதல் நற்பலன் தருவர். உடல் நலம் ஆரோக்கியம் பெற்று, பணிகளில் ஆர்வம் கொள்வீர்கள். பண வரவு திருப்திகரமான அளவில் கிடைக்கும். வீடு, புதிய வாகனம் வாங்க சிலருக்கு யோகம் உண்டு. புத்திரர், பெற்றோர், சான்றோர்களின் கருத்துகளை ஏற்று செயல்படுவர். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். இல்லறத் துணை, கருத்து ஒற்றுமையுடன் குடும்ப நலம் பேணுவார். தொழிலில் அபிவிருத்தி பணியை திட்டமிட்டபடி நிறைவேற்றலாம். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வீர்கள். பெண்கள், கணவரின் கூடுதல் அன்பு, பாசம் கிடைத்து சந்தோஷ வாழ்வு பெறுவர். மாணவர்கள், புதிய பயிற்சியினால் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**கடகம்**

உங்கள் ராசிக்கு ராகு, சூரியன், சந்திரன் மட்டுமே நற்பலன் தருவர். கடந்த காலத்தில் நீங்கள் செய்த நற்செயலுக்கு, உரிய பலன் தேடி வரும். உடன் பிறந்தவர்களின் வாழ்க்கை முன்னேற்றம் பெற உதவுவீர்கள். எதிர்வரும் சிரம சூழலை மதிநுட்பத்துடன் சரி செய்வீர்கள். இல்லறத் துணையின் உடல் நலம் சீராக, மருத்துவ சிகிச்சை உதவும். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் வருகை, மாறுபட்ட தன்மையை எதிர்கொள்ள வைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை தவறாமல் பின்பற்ற வேண்டும். பெண்கள், கணவரின் பேச்சு, செயலில் குறை காணும் சிந்தனையை தவிர்க்கவும். மாணவர்கள், அதிக பயன் தராத பொருளை வாங்குவதில் ஆர்வம் வேண்டாம்.

### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

**சிம்மம்**

இந்த வாரம், உங்கள் ராசிக்கு புதன், சந்திரன் மட்டுமே நற்பலன் தருவர். எந்த செயலிலும் நிதானத்தை பின்பற்ற வேண்டும். சுயகவுரவம் பாதுகாப்பதற்காக, அதிக பணம் செலவு செய்கிற நிலையை தவிர்ப்பதால் சிரமம் விலகும். அளவான உழைப்பு, சீரான ஓய்வு, உடல் நல ஆரோக்கியத்தை பாதுகாக்கும். வெளியூர் பயணத்தில் கூடுதல் பாதுகாப்பை பின்பற்ற வேண்டும். புத்திரர், தம் தேவை நிறைவேற தாமதம் ஆவதால் வருத்தம் கொள்வர். இல்லறத் துணை, பணிகளில் சில குளறுபடிகளை எதிர்கொள்வார். தொழிலில் உருவாகிற மந்த நிலையை மாற்ற, உங்கள் நலம் விரும்புபவரின் ஆலோசனை உதவும். பணியாளர்கள், பணியிடத்தில் தேவையற்ற விஷயங்களில் விவாதம் பேச வேண்டாம்.

### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

**கன்னி**

உங்கள் ராசிக்கு செவ்வாய், குரு, சுக்கிரன், சனி பகவானின் அருள் பலம் சிறப்பாக உள்ளது. பல நாள் மனதில் திட்டமிட்ட பணிகளை முழு முயற்சியுடன் மேற்கொள்வீர்கள். இளைய சகோதரர் உதவி, ஆலோசனை வழங்குவர். புத்திரர் விரும்பிய பொருளை, தாராள பணச் செலவில் வாங்கித் தருவீர்கள். விவகாரங்களில் அனுகூலத் தீர்வு கிடைக்கும். இல்லறத் துணை, கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு வரும். பணியாளர்கள், தன் கடமையை உணர்ந்து பணிபுரிவீர்கள். மாணவர்கள், புதியவர்களை நண்பராக ஏற்பதில் உரிய கவனம் வேண்டும்.

### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**துலாம்**

உங்கள் ராசிக்கு சூரியன், புதன், சுக்கிரன், கேதுவின் அமர்வு சிறப்பான இடங்களில் உள்ளன. மனதில் ஞானம் நிறைந்த சிந்தனை உருவாகி, புதிய பாதையில் நடைபோட வைக்கும். நிம்மதி நிறைந்த வாழ்க்கை முறை உருவாகும். சமூகப் பணியிலும் ஈடுபாடு கொள்வீர்கள். புத்திரரின் உடல் நலம் ஆரோக்கியம் பெற, சத்தான உணவை உண்ணத் தருவீர்கள். எதிர்ப்பாளர், உங்களின் நல்ல செயல்களை வியப்புடன் கவனிப்பர். இல்லறத் துணை வழிசார்ந்த உறவினர்களால் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் புதிய மாற்றம் கொண்டு வர முயற்சி மேற்கொள்வீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி நற்பெயர் பெறுவீர்கள். மாணவர்களின் படிப்புக்கான பண வசதி, திருப்திகரமான அளவில் கிடைக்கும்.

### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

**விருச்சிகம்**

இந்த வாரம், உங்கள் ராசிக்கு சுக்கிரன், ராகு, குருவின் அமர்வு சிறப்பான இடங்களில் உள்ளன. வாரப் பிற்பகுதி நாட்களில், சூரியன் நற்பலன் தருவார். மனம், செயலில் உற்சாகம் அதிகரிக்கும். நல்லோரின் ஆதரவு கிடைத்து, பல நாள் திட்டமிட்ட செயலை நிறைவேற்றுவீர்கள். நீண்ட தூர வாகன பயணம், பயன் அறிந்து மேற்கொள்ளவும். புத்திரரின் சந்தேகத்தை நிவர்த்தி செய்வதில் முக்கிய கவனம் கொள்வீர்கள். விவகாரங்களில் விலகுவதால் பணச் செலவு, கால விரயம் வராமல் தவிர்க்கலாம். இல்லறத் துணை, குடும்ப ஒற்றுமையை பாதுகாத்திடுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை உருவாகும். உத்தியோகஸ்தர்கள், பணியாளர்களுக்கு ஊக்கம் தந்து பணி இலக்கு நிறைவேற்றுவர். பெண்கள், இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். மாணவர்கள், சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது.

### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

**தனுசு**

உங்கள் ராசிக்கு சுக்கிரன், செவ்வாய், சந்திரன் மட்டுமே நற்பலன் வழங்குவர். பிறர் மனம் அறிந்து பேசி, நற்பெயரை பாதுகாப்பீர்கள். எதிர்ப்பு விலகி, வாழ்வில் முன்னேற்றம் பெற புதிய வாய்ப்புகளை பெற்றுத் தரும். இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். ஆன்மிக நம்பிக்கை உள்ளவர்களின் அறிமுகம், உதவி கிடைக்கும். குடும்ப உறுப்பினர், ஒற்றுமை எண்ணங்களுடன் செயல்படுவர். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், திருப்திகர பணவரவும் கிடைக்கும். இல்லறத் துணை, உங்களை புகழ் மிக்கவராக உருவாக்குவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும். பணியாளர்கள், பணியின் தரம் குறித்து அதிப்தியாக பேசுபவரிடம் விலகுவது நல்லது. மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதை குறைக்கவும்.

### உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்

**மகரம்**

உங்கள் ராசியில் அனுகூலமாக உள்ள சுக்கிரனை, சனி, கேது, குரு அனுகூல இடங்களில் அமர்வு பெற்று பார்க்கின்றனர்; இதனால், நடை, உடை, செயலில் வசீகர மாற்றம் உருவாகும். முக்கியஸ்தரின் அன்பு, உதவி கிடைக்கும். தெய்வ வழிபாடுகளில் ஆர்வம் கொள்வீர்கள். குடும்பத்தில் மாங்கள நிகழ்வு ஏற்படும். . புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பணி சார்ந்த வெளியூர் பயணம் ஏற்படலாம். இல்லறத் துணை, கருத்து ஒற்றுமையுடன் குடும்ப நலம் பேணுவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து உபரி பண வரவு கிடைக்கும். பணியாளர்கள், சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவீர்கள். பெண் களுக்கு, தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள், பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க கூடாது.

### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

**கும்பம்**

உங்கள் ராசிக்கு சூரியன், சுக்கிரன், சனி பகவான் மட்டுமே இந்த வாரம் நற்பலன் வழங்குவர். இயலாது என ஒதுக்கி வைத்த பணியை, உத்வேகமுடன் நிறைவேற்றுவீர்கள். அரசு சார்ந்த அனுகூலம் பெற உதவி உண்டு. உறவினர் குடும்ப விவகாரங்களில் சமரசம் பேச வருகிற அழைப்பை தவிர்க்கவும். பூர்வ சொத்தில் இருந்த இடையூறு விலகும். புத்திரர், உங்கள் சொல் கேட்டு நடந்து கொள்ள முயற்சிப்பர். சத்து நிறைந்த உணவு, சீரான ஓய்வு, உடல் நலம் காக்க உதவும். இல்லறத் துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை கவனமுடன் பாதுகாக்கவும். பணியாளர்கள், பொறாமை குணம் உள்ளவர்களிடம் சொந்த விசயம் பேச வேண்டாம். பெண்கள், நகை இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது. மாணவர்கள், படிப்பில் சிறப்பு பெற சிலரது உதவி கிடைக்கும்.

### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

**மீனம்**

உங்கள் ராசிக்கு குரு, சூரியன், சுக்கிரன், புதனின் அமர்வு சிறப்பான இடங்களில் உள்ளது. எண்ணங்களில் புதுமை கருத்து உருவாகும். தாமதமான பணியை நிறைவேற்ற, அதிர்ஷ்டகர வாய்ப்பு கிடைக்கும். தம்பி, தங்கைக்கு மங்கள நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை திருப்திகரமாகும். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி பணி மேற்கொள்ளலாம். புத்திரரின் சொல்லும், செயலும் சிறப்பாக அமைந்து பெருமை தேடித் தரும். இல்லறத் துணை, உங்களின் நல்ல குணம் பாராட்டுவார். புதியவர்களின் வரவேற்பு கிடைத்து தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி காண்பீர்கள். மாணவர்கள், மகிழ்ச்சிகர மனதுடன் படித்து, நல்ல தேர்ச்சி விகிதம் பெறுவர்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 69

அடேல் பாலசிங்கம்



தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகத் திம்புப் பேச்சுவார்த்தை அமைந்தது. முதற் தடவையாக ஆயுதம் தரித்த தமிழ் விடுதலை அமைப்புக்களும் மிதவாத அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்த் தேசியப் பிரச்சினையின் அடிப்படைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று கூட்டாகவும் ஏகமனதாகவும் கேட்கத் தீர்மானித்தன. தமிழ் மக்கள் அனைவரும் ஏகோபித்த குரலாக முன்வைத்த சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையாகத் தங்கள் தேசியப் பிரச்சினையின் அடி ஆதாரக் கோரிக்கையாக முன்வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அரசியல் தீர்வுக்கான அந்த உரிமையின் அடிப்படையில், இனப்பிரச்சினையின் அடி நாதமாக நான்கு கோட்பாடுகளைத் தமிழ் பிரதிநிதிகள் முன்வைத்தார்கள்.

01. தமிழ் மக்கள் தம்மை ஒரு தேசிய இனமாக வரித்துக் கொள்கிறார்கள்.
02. தமிழ் மக்களுக்கு வரலாற்று ரீதியாக அடையாளம் காட்டக் கூடிய ஒரு தாயகம் உண்டு. அதன் மீது அவர்களுக்கு பிரத்தியேக உரிமை உண்டு.
03. தமிழ் மக்கள் தனித்துவமான தேசிய இனம் என்ற வகையில் அவர்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு.
04. தமிழ் மக்களுக்கு அனைத்த அடிப்படை மனித உரிமைகளும் குடியியல் உரிமைகளும் உண்டு.

இந்தக் கோட்பாடுகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று தமிழ்ப் பிரதிநிதிகள் வாதிட்டார்கள். அத்துடன் தமிழ்த் தேசிய பிரச்சினைக்கான அர்த்தமுள்ள நிரந்தரத் தீர்வானது இந்த அடிப்படைகள் மீது வகுக்கப்பட்டதாக வேண்டும் என்று சிறீலங்கா அரசுக்கு தெளிவாகத் தெரிவித்தார்கள்.

திம்புவில், சிறிலங்கா அணிக்குத் தலைமை தாங்கியவர் ஒரு மூத்த அரசியல் வாதியல்லர். அரசுத் தலைவர் ஜூனியஸ் ஜெவர்த்தனாவின் சகோதரரும் சட்டத் தரணியுமான ஹெக்ரர் ஜெயவர்த்தனா மறுத்தார். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையோ, அவர்களுக்குத் தனியான பாரம்பரியத் தாயகம் உண்டு என்பதையோ, சுய நிர்ணய உரிமைக்கு அவர்கள் உரித்தானவர்கள் என்பதையோ ஏற்றுக் கொள்ள முடியாதவை என்று சிறீலங்காவின் ஐக்கியத்தையும் இறையாண்மையையும் நிராகரிப்பதால் அவற்றைச் சிறிதேனும் ஏற்க முடியாது என்று அவர் வாதிட்டார். சிறீலங்கா அரசும் சரி, தமிழ் அரசியல் அமைப்புக்களும் சரி தங்கள் தங்கள் நிலையிலே விடாப்பிடியாக நின்று விட்டுக் கொடாது உறுதியாக நின்றதால் பேச்சுவார்த்தை முடக்கம் அடைந்தது. நடுவராக நின்ற பண்டாரிக்கு, பேச்சு வார்த்தை நடத்தும் திறனோ ராஜதந்திர மதியூகமோ இல்லாததால் அவரால் இணக்கம் ஒன்றைக் கொண்டு வர முடியவில்லை. மாறாக அவையடக்கமற்ற குறிப்புக்களை அவர் வெளியிட்டு, ரெலோவின் பிரதிநிதியாகத் திம்புப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட நடேசன் சத்தியேந்திராவிடம் செம்மையாக வாங்கிக் கட்டிக் கொண்டார்.

திம்புப் பேச்சுவார்த்தையில் புலிகளின் பிரதிநிதிகளாக கலந்து கொண்ட திலகருடனுன் அன்ரனுடனும் தொலைபேசி மூலம் பாலா அடிக்கடிதொடர்பு வைத்துக் கொண்டார்.

(பதிவு தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழவிடுங்கள்
# மூன்றாம்பாலாரையும்


- சாரி

கடந்த கிறிஸ்துமஸ் முடிந்த ஒரு வாரம் கழித்து, 17 வயது நிரம்பிய லீலா அல்கார்ன் அமெரிக்காவின் ஒஹியோ மாகாணத்து கிங்ஸ் மில்ஸ் பகுதியில் இருந்த தனது வீட்டைவிட்டு நள்ளிரவில் வெளியேறினார். மாநில நெடுஞ்சாலையில் டிரெய்லர் இணைக்கப்பட்ட டிராக்டர் வந்தபோது குறுக்கே பாய்ந்து தன்னை மாய்த்துக்கொண்டார். இறப்பதற்கு முன்னால் டம்ப்ளர் என்ற சமூக வலைத்தளத்தில் விடுத்த தனது இறுதிச் செய்தியில், தயவுசெய்து வருத்தப்படாதீர்கள்; நல்லதற்காகத்தான் இதைச் செய்கிறேன். நான் வாழ்ந்திருக்கக்கூடிய வாழ்க்கை வாழத்தக்கதல்ல, காரணம் நான் மூன்றாம் பாலினத்தவள் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆணாகப் பிறந்திருந்தாலும் தன்னைப் பெண்ணாக உணர்ந்து அவ்வாறு வாழ விரும்பிய லீலாவை, பழமையான எண்ணங்களில் ஊறிய அவருடைய பெற்றோர் அவ்வாறு வாழ அனுமதிக்கவில்லை. நான் (என் விருப்பத்தை) சொன்னபோது என்னுடைய தாய் கடுமையாக கோபம் அடைந்தாள். இப்படியெல்லாம் நினைப்பது சில காலத்துக்குத்தான், நீ உண்மையாகவே பெண்ணாக இருக்க முடியாது. கடவுள் தவறாகப் படைக்க மாட்டார். நீதான் உன்னைப் பற்றித் தவறாகக் கருதிக்கொண்டிருக்கிறாய். இதைப் படிக்கும் அன்பு பெற்றோர்களே, இதை உங்களுடைய குழந்தைகளிடம் கூறாதீர்கள், அப்படி நீங்கள் கூறினால், அது வேறொன்றையும் செய்யாது, அவர்கள் மேலும் தங்களையே வெறுக்கத் தொடங்குவார்கள்; என் விஷயத்தில் அதுதான் நடந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார் லீலா அல்கார்ன்.

## ஒரு வாய்ப்பு

லீலா சொல்வதில் தவறேதும் இல்லை. உலகம் பல விதமான மனிதர்களைக் கொண்டது. அவர்களில் ஒரு வகையினர்தான் மூன்றாம் பாலினர். தான் எதுவாக இருப்பதாக லீலா பெருமையாக நினைத்தாளோ அதுவாகவே கருதிக்கொள்ள உலகம் அவளுக்கு ஒரு வாய்ப்பைத் தரவில்லை. அந்த உலகை மாற்ற ஒரே வழி, தான் சாவதுதான் என்ற தவறான முடிவை லீலா எடுத்துவிட்டாள்.



தற்கொலை என்பது மூன்றாம் பாலினரிடையே நிரந்தரமாகிவிட்டது. தற்கொலை செய்துகொள்ளும் மனப்போக்கு அதிகம் கொண்டவர்கள் என்ற நிலையில் மூன்றாம் பாலினர் உள்ளார்கள். மூன்றாம் பாலினரில் 40% பேர் ஏதாவதொரு கட்டத்தில் தற்கொலைக்கு முயற்சி செய்கிறார்கள் என்று ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. இப்படிப்பட்ட மூன்றாம் பாலினத்தவர் ஒருவரின் வாக்குமூலம் இதோ-

தற்கொலைக்கு தயாரான மூன்றாம் பாலினத்தவர்களில் நானும் ஒருத்தி. 1986 ஆம் ஆண்டு, நோவா ஸ்காட்டியா என்ற இடத்திலிருந்து அட்லாண்டிக் கடலில் குதிக்க முடிவு செய்து தயாராகிவிட்டேன். சட்டென்று அடுத்த கணம் ஏதோ தோன்றி அங்கிருந்து திரும்பி நடந்தேன், இதோ உங்கள் முன் நிற்கிறேன்.

தொடக்க காலத்திலேயே தாங்கள் விரும்பும் பாலினமாக மாறிவிடுவதே மூன்றாம் பாலினத்தவர்களுக்கு நல்லது. ஆனால், எங்களில் பெரும்பாலானவர்களுக்கு அது இயலாத காரியம், காரணம் குடும்பத்தினர் அந்த முடிவை ஆதரிப்பதே இல்லை. மேற்கொண்டு காலடி எடுத்து வைக்கவே அச்சமூட்டும் புதிய பாதையில் நடக்க பண வசதி உள்ளிட்ட ஆதாரங்கள் மூன்றாம் பாலினருக்கு அவசியம். இந்த நிலையில் எதிர் காலத்தின் மீது நம்பிக்கை வைத்து உங்களை நீங்களே காப்பாற்றிக்கொள்வதற்கான உத்திகளைத் தேர்ந்தெடுப்பதே சிறந்த வழியாக இருக்க முடியும். எனக்கு உதவியாக இருந்தவை லீலாவுக்கு உதவிகரமாக இருந்திருக்க முடியுமா என்று தெரியவில்லை. ஆனால், நான் எப்படி இவ்வளவு தூரம் கடந்து வர முடிந்தது என்று சிந்தித்துப் பார்க்க கடந்த வார அவகாசம் உதவியது.

## காப்பாற்றிய புத்தகங்கள்

என்னுடைய வாழ்க்கையை புத்தகங்கள் ஓரளவுக்குக் காப்பாற்றின. ஜேன் மாரிஸ் எழுதிய கானன்ட்ரம் என்ற நூல் என்னைப் போன்றவர்கள் வாழக்கூடிய இன்னொரு விண்மீன் கூட்டத்தை எனக்குக் காட்டியது. லீலா உயிரோடு இருந்திருந்தால் அவரிடம் ஜேனட் மாக் எழுதிய ரீடிஃபைனிங் ரியல்நெஸ், கேட் போர்ன்ஸ்டெயின்ஸ் எழுதிய ஹலோ குரூயல் வேர்ல்ட் என்ற புத்தகங்களையும் கொடுத்திருப்பேன்.

அவை நிச்சயம் அவரிடம் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும். புத்தகங்களைப் படிப்பது எனக்கு மன ஆறுதலைத் தந்தது என்றால் எழுதுவதும் அப்படியே. புத்தகங்களைப் படிப்பது, பத்திரிகைகளுக்கு எழுதுவது, புதுப்புது உலகங்களைக் கண்டுபிடிப்பது போன்றவை என் சிந்தனையை நல்ல விதமாக திருப்பிவிட உதவிகரமாக இருந்தன. எதையும் விவரமாக எழுதுவது என் மனக் குழப்பங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ள உதவியது.

சில வேளைகளில் உரத்த குரலில் கத்துவேன், அது என்னுடைய மன அழுத்தங்களை வெளியேற்றும் வடிகாலாக உதவியிருக்கிறது. எங்களுடைய வீட்டு பியானோவை வாசிக்கத் தொடங்கி அதன் கம்பி அறுந்துபோகும் வரையில் உச்சஸ்தாயியில் வாசித்துக்கொண்டிருப்பேன். ஒரு இசைக் குழுவிலும் சேர்ந்து பாடிவந்தேன். அவர்கள் 2 பாடல்களைப் பிரதானமாகப் பாடுவார்கள். உன்னுடைய அன்பு வெள்ளத்தைப் பாய விடு என்பது அதில் ஒன்று. நான் பாடுவதே, நான் வாழ்கிறேன் என்று எனக்கு நானே ஊர்ஜிதப்படுத்திக்கொள்வதற்காக. அதே சமயம் என்னுடைய மன வலிகளை நான் உணர்ந்த வகையில் வெளிப்படுத்தவும் பாடினேன். சில குளிர்கால இரவுகளில் வானத்தைப் பார்த்துக் கூச்சலிடுவேன். என்னுடைய குரலே எதிரொலியாக என்னை நோக்கித் திரும்பி வரும்.

படி, எழுது, கத்து என்பது சாப்பிடு, பிரார்த்தனை செய், அன்புடனிரு என்பதைப் போன்ற அன்றாட சடங்கல்ல. ஆனால், என்னைப் பொறுத்தவரை மிகவும் உதவியாக இருந்தன. 1970-களில் எனக்குக் கிட்டாத பல வசதிகள் இப்போது நவீன காலத்தில் வந்துள்ளன. வாழ்க்கையில் மிகவும் சோகமான தருணங்களை எதிர்கொண்டு அதிலிருந்து மீண்டவர்கள் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் இணையதளங்கள் இன்று வந்துவிட்டன.

லீலாவின் இறுதி ஆசைகளில் ஒன்றே ஒன்றை நம்மால் நிறைவேற்ற முடியும்: என்னுடைய மரணம் சிலருக்கு அர்த்தமுள்ளது. இந்த ஆண்டு தற்கொலை செய்துகொண்ட மூன்றாம் பாலினத்தவரில் மேலும் ஒரு எண்ணிக்கையை என்னால் கூட்ட முடிந்திருக்கிறது. யாராவது ஒருவர் இதைப் பார்த்து, போதும், இந்த எண்ணிக்கையோடு நிறுத்துங்கள், இதோடு இது நிற்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். நானும் கேட்டுக்கொள்கிறேன், சமூகமே இத்தோடு நிறுத்து, தயவுசெய்து!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்கள்



சிறுகதை

மிருசுவில்
தமிழ்தாணி

நேரம் நள் ளிரவு இரண்டு மணியிருக்கும். எங்கும் நிசப்தமாயிருந்தது. எங்கேயோ ஒரு நாய் மட்டும் ஓயாது குரைத்துக் கொண்டிருந்தது. பாலசுப்பிரமணியம் வாத்தியாரின் நாயாக இருக்கலாம். அது எப்போதுமே இப்படித்தான். இராசதுரைக்கு இன்னமும் உறக்கம் வரவில்லை. பொழுது விடிந்தால் அந்த இரண்டாயிரத்தைப் புரட்டுவதற்கு என்ன வழி! அவனுடைய உறக்கம் கலைந்ததுக்கும் மனக்குழப்பத்துக்கும் காரணமிதுவே தான். சுருட்டொன்றை எடுத்துப் பற்ற வைத்து அநாயாசாமாக நான்கு புகைகளைத் தள்ளினான். மனதில் ஒரு பொறி தட்டியது. அது சரியாகவே பட்டது. விடிந்ததும் முதல் வேலையாக... திட்டத்தை வகுத்துக் கொண்டான்.

இராசதுரை மற்றவர்களைப் போல எடுத்ததுக்கெல்லாம் அனாவசியமாகக் கடன் கேட்கும் பேர் வழியல்ல. ஆனால் இப்போதைய இக்கட்டான சூழ்நிலையில் காசு இரண்டாயிரம் கடன் பட்டால் தான் மனைவியின் மருந்துத் தேவையைப் பூர்த்தி செய்யலாம். ஊரிலுள்ள வசதி படைத்த தனவந்தர்கள் எல்லோரிடமும் கேட்டுப்பார்த்தாயிற்று. இவனுடைய போதாத காலமோ என்னவோ! எல்லோருமே கைவிரித்து விட்டார்கள். இந்தக் கையறு நிலையில் தான் இப்போது ஆறுமுகம் முதலாளியின் வீட்டு வாசலில் பற்களைக் காட்டிக் கெஞ்சிய நிலையில் பரிதாபமாக நிற்கின்றான் இராசதுரை.

தோட்டம், கமம், வேலியடைத்தல், விறகு கொத்துதல் போன்ற எந்த விதமான வேலைகளையும் மிகவும் கச்சிதமாகவும் விரைவாகவும் செய்து முடிப்பதில் இராசதுரை ஒரு கை தேர்ந்தவன். இதன் காரணமாக ஒரு காலத்தில் கூலித் தொழிலுக்கு இராசதுரை தான் என்னும் ஒரு பெயரும் அடையாளமுமிருந்தன.

இப்பொழுதுதெல்லாம் அவனால் முன்னையது போல ஓடியாடி உற்சாகமாக வேலை செய்ய முடியவில்லை. என வே அவனுடைய பழைய மவுசு இப்போது அவனுக்கில்லை என்பதே உண்மையான நிலைப்பாடு. திருமணம் முடிந்திருந்தும் புத்திர பாக்கியமில்லாத துர்அதிஷ்டசாலியாக இருந்தான். அவனுக்குத் துணை கட்டிய மனைவி வைகுந்தம்மட்டுமே. இதை விட உறவுகள், பெருமைகள் பேசிக் கொள்ளவோ பாராட்டிக் கொள்ளவோ எதுவு மேயில்லை. அன்றாடம் சம்பாதித்து அன்றாடம் வயிற்றில் போட்டது தான் மிச்சம். சல்லிக் காசைக் கூட சேமித்து வைத்திருக்க முடியவில்லை. மனைவிதான் இதுவரை எல்லா வழிகளிலும் ஒத்தாசையாக இருந்தாள். இப்போது அவளும் படுக்கையில் விழுந்தவுடன் வலது கை முறிந்தது போன்ற தொரு நிலை அவனுக்கு. கோயில் காணியில் குடிசை போட்டு அன்றாடம் உழைத்து வாழ்ந்தாலும் நிம்மதியாகத் தானிருந்தான். ஆனால் இப்போது எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது.

கிட்டத் தட்ட பதினைந்து நாள்களாக படுக்கையில் வீழ்ந்து விட்ட வைகுந்தம் அரச மருத்துவமனை விடுதியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறாள். ஏதோ சிறுநீரகம் சம்பந்தமான நோயென்று மருத்துவர்கள் உறுதிபடக் கூறி விட்டார்கள். பொதுவாக ஏழைகளுக்கு வராத வரக்கூடாத ஒரு பணக்காரப் பயங்கர நோய். ஆனால் ஏழையென்றும் பாராது இவளுக்கு வந்து விட்டதே! பாவம்! யார் தான் என்ன செய்ய முடியும்! அவளின் நோயின் வீரியத்தைத் தணிப்பதற்கு ஏதோ ஒரு மருந்து! ரூபா இரண்டாயிரம் வருமாம். வெளிக்கடைகளில் தான் வாங்க வேண்டும். இனியும் தாமதித்தால் தாங்கள் பொறுப்பில்லை என மருத்துவர்கள் கறாராகச் சொல்லி விட்டனர். அதற்காகத் தான் நாயாய்ப் பேயாக அலைந் துலைந்து, கேட்காதவர்களையெல்லாம் கேட்டு, யார் யாரிடமோ பல்லுக் காட்டியும் அந்த இரண்டாயிரம் அவனுடைய கைக்குக் கிடைப்பதாயில்லை. ஒரு காலத்தில் ஊரிலுள்ள அனைவரிடமுமே நல்ல பெயர் பெற்றிருந்தவன். வேண்டிய நேரங்களில் இவர்கள் தனக்கு உதவுவார்கள் என்று நம்பியிருந்தான்.

"டேய் பேய் மனிசா! காசென்ன மரத்திலை காய்க்குதோ நீ கேட்ட உடனை புடுங்கித் தாறதுக்கு! இரண்டாயிரம் ரூபா ஏதோ சின்னத்தொகை மாதிரிச் 'சிம்பிளாய்' கேக்கிறாய். போடா போ! மனிசர் படுற பாட்டுக்கை"

ஒரு காலத்தில் இராசதுரையின் உதிரத்தையும் வியர்வையையும் உறிஞ்சிக் குடித்த குணம் முதலாளி கிட்டத்தட்ட ஒரு நாயை விரட்டுவது போல விரட்டியடித் தார்.

**"எடேய்! ஆஸ்பத்திரியிலை விட்டிட்டியெல்லோ! இனி அங்கை டாக்குத்தர்மார் கவனிப்பினம். நீ சும்மா தேவையில்லாமல் கடன்பட்டிட்டுப் பிறகு என்னண்டு திருப்பித் தருவாய்! உன்னாலும் இனி உழைக்கப் பிழைக்கேலாது. சும்மா வீண் வேலையை விட்டிட்டு வேறை வேலையைப் பார்"**

"எடேய்! ஆஸ்பத்திரியிலை விட்டிட்டியெல்லோ! இனி அங்கை டாக்குத்தர்மார் கவனிப்பினம். நீ சும்மா தேவையில்லாமல் கடன்பட்டிட்டுப் பிறகு என்னண்டு திருப்பித் தருவாய்! உன்னாலும் இனி உழைக்கப் பிழைக்கேலாது. சும்மா வீண் வேலையை விட்டிட்டு வேறை வேலையைப் பார்"

இது வேலுப்பிள்ளைக் கமக்காரன். அடிக்கடி அவர் வீட் டுக்குச் சென்று அவர் ஏவாத பணிகளைக் கூடத் தன்னுடைய வேலைகளாக எண்ணிச் செயற்பட்ட இராசதுரையின் நம்பிக்கையில் விழுந்த ஏமாற்ற அடி!

உண்மை தான்! இராசதுரையின் உடல் ஆரோக்கியமாக இருந்த காலங்களில் அவன் கடினமாக உழைத்துக் கொடுத்த காலத்தில் ஊதியத்தைப் பெரிதாக எண்ணாது தன்னுடைய உடலை வருத்திப் பாடுபட்ட காலத்தில் அவன் எல்லோருக் கும் வேண்டியவனாக இருந்தான். இப்போது அவனுடைய இரத்தம் உறிஞ்சப்பட்டு விட்டது. உற்சாகம் பலமெல்லாம் தொலைந்து போய் விட்டன. இனி அவனால் யாருக்கு என்ன பிரயோசனம்! இதனால் இராசதுரையையும் அந்த ஊரவர்கள் வீசியெறிந்து விட்டார்கள்.

"என்னடாப்பா இராசதுரை விடியக் காலைமை முழுவியளத்துக்கு வந்து நிற்கிறாய்"

குறைச் சுருட்டை உதட்டில் வைத்துப் பற்றிப் புகையை உறிஞ்சி இழுத்தார் ஆறுமுகம் முதலாளி.

யாரும் எப்படியுமிருக்கலாம். ஆனால் இவரை யாருமே குறை கூற முடியாது. அவருடைய பேச்சில் தான் சற்றுக் கடுமை தொனிக்குமேயொழிய மிகுந்த இரக்க குணம் படைத்தவர். வெட்டொன்று துண்டிரண்டாக பேசுவார். ஆனால் பின்பு மனிதர் இறங்கி விடுவார். அப்படிப்பட்டவர் தானிந்த ஆறுமுகம் முதலாளி.

இராசதுரைக்கு அவர் மீது வைத்திருந்த கணிப்பு இது தான். அவனைப் பொறுத்த வரைக்கும் அவர் தான் அவனுடைய நம்பிக்கை நட்சத்திரம்.

"எடே! உன்ரை மனிசிக்குச் சுகமில்லை எண்டது சரி தான். அதுக்கு உனக்குத் தந்து உதவி செய்யுறதுக்கு என்னட்டையும் இப்ப கையில மடியிலை இருக்க வேணுமே! பங்கை பார்! மழை தண்ணியில்லாமல் தோட்டம் துரவெல்லாம் காய்ஞ்சு போய்க் கிடக்கு. வெள்ளாண்மை இல்லை. இந்த நிலைமையிலை என்ன சீலம்பாயெண்டு காசு வாறது! ஆரேன் தருமதியானவங்கள் தந்தால் பாப்பம். இப்ப ஆரிட்டையேன் மாறு. ஏதேன் அம்பிட்டால் தாறன். ஆனால் நம்பியிருக் காதை"

மலைபோல நம்பியிருந்த ஆறுமுகம் முதலாளியும் கையை விரித்து விட்டார். மருத்துவர்களிடம் தனது இயலாமையைக் கூறினான் இராசதுரை. தங்கள் இயலாமை நிலையைக் கூறினார் மருத்துவர்கள். எல்லாம் விதிவசமே!

"டேய் பரமு! நான் இரண்டு சோடி மேளத் துக் குச் சொல்லிப்போட்டன். அது என்ரை கணக்கு. நீங்கள் மற்ற ஒழுங்குகளைப் பாருங்கோ!

ஆறுமுகம் முதலாளி மிகுந்த உற்சாகத் துடன் பெருமையாகச் சொன்னார்.

"ஓமண்ணை! நான் பெட்டிக்குக் காசு குடுத்து அனுப்பியிருக்கிறேன். நல்ல விலை கூடின பெட்டியிலை தான் இராசதுரை பெண்டிலைக் கொண்டு போக வேண்டும். மற்றது குணம் அண்ணை சொல்லிப் போட்டார். வெடிச் செலவு எல்லாம் தான் தானாம்."

பரமு பெருமை பொங்கச்சொன்னான். "எட பொடியள்! பாவம் அவன் இராசதுரை. அவன் எங்களுக்கு எவ்வளவு உதவியள் செய்தவன். அவனை மறக்கேலுமே! அதுக்காக எண் டாலும் அவன்ரை பெண்சாதியின்ரை செத்த வீட்டை மற்ற ஊராரவை புகழத்தக்க மாதிரிச் செய்து முடிக்க வேணும். இது தான்ர நாங்கள் இராசதுரைக்குச் செய்யுற நன்றிக் கடன். எங்களுக்கும் பெருமையெல்லோ!

கங்காணி இளையதம்பியார் சொல்லி எகத்தாளமாகச் சிரித்தார். இராசதுரையின் ஆருயிர் மனைவி சவம் எனும் பெயரில் மயானத்தை நோக்கி இறுதி யாத்திரை போய்க்கொண்டிருந்தாள். பறைமேளம் முழங்க, மறுபுறம் வெடியோசை செவிகளைச் செவிடாக்க இராசதுரை தோளில் கொள்ளிக் குடத்துடன் சோகமாக நடந்து கொண்டிருந்தான். ஆறுமுகம் முதலாளி குணம் முதலாளியுடன் ஊரவர்கள் நின்று மரண ஊர்வலத்தை எத்தனை ஆடம்பரமாக நெறிப்படுத்திக் கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்த இராசதுரையின் மனம் "பகட்டு மனிதர்களே! நீங்கள் மனிதர்களா! என்று கேட்டுக்கொண்டது.

(யாவும் கற்பனையே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபத்திரமில்லாத வயிறு

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

**உபத்திரமில்லாத வயிறு**

எதுவித உபத்திரமும் தராமல் பேரமைதி குடிகொள்ள கம்மென்று அடங்கிக் கிடந்தது வயிறு. எத்தனை துன்பங்களை அனுபவித்துவிட்டார். அவமானங்கள் சொல்லியடங்காது.

கடாமுடா என்ற சத்தம் அவரது வயிற்றில் திடீரென எழும்பும். பல தருணங்களில் அருகில் இருப்பவர் இவரை புதினமாகப் பார்க்கும் அளவிற்கு அது பலமாக ஒலிக்கும். வேளை கெட்ட தருணங்களில் பறபற வென மலவாயிலால் வாய்வு ஆரவாரமாக வெளியேறும். வயிறு முட்டுமாப்போல அந்தரம் கொடுக்க சற்றே பிட்டத்தை ஒரு புறம் உயர்த்தி வாய்வைத் தானாகவே வெளியேற்ற நேர்வதும் உண்டு. தலைகுனிந்து சத்தம் எழுப்பாது சிரிப்பார்கள் அருகில் இருப்பவர்கள்.

விருந்தினர்கள் வந்திருக்கும் போது டொயிலற்றுக்குப் பேகக் கூடாது இது மனைவியின் கண்டிப்பான உத்தரவு. புறபற சத்தம் அருகில் உள்ள வரவேற்பறை சத்தம் கேட்குமே என்ற வெக்கையீனம் அவளுக்கு.

இவை எல்லாம் பயிற்றங்காய், உருளைக் கிழங்கு, பருப்பு போன்ற வாய்வு பண்டங்களைச் சாப்பிட்டதால் என எண்ணியிருந்தார். அவை காரணமல்ல என்பது இப்பொழுதுதான் புரிகிறது.

ஆபீசில் கூட வேலை செய்பவர்கள் கணக்கு வைப்பார்கள் இவர் எத்தனை தடவைகள் மலம் கழிக்கச் செல்கிறார் என்று. காலையில் வேலைக்கு வந்த சிறிது நேரத்தில் கட்டாயம் ஒரு தடவை. முதிய உணவிற்கு சற்று முன்னர் மற்றொரு தடவை தப்பாது. இந்த ஒரு வாரமாக இவை எதுவுமே அவருக்கு இல்லை.

டொக்டரின் அறிவுரைப்படி பால் குடிப்பதை நிறுத்திய பின்னர்தான் அவருக்கு இந்த நிம்மதி கிடைத்தது. வழமையாகப் பால் குடிப்பது நல்லது என்று சொல்கிற மருத்துவர்தான் இவரை மட்டும் பால் குடியாதே என அறிவுறுத்தி இருந்தார். காரணம் அவரது உணவுத் தொகுதியால் பாலை சமபாடடையச் செய்ய முடிவதில்லை.

## பால்வெல்லம் இணங்காமை

பால் சமிபாடடைவதில் சிக்கல் இருப்பதை மருத்துவத்தில் லக்டோஸ் இன்றொலரன்ஸ் என்பார்கள். லக்டோஸ் Lactose என்பது பாலில் உள்ள சீனிப் பதார்த்தமாகும். லக்டோசில் இரண்டு வகையான இனிப்புகள் இணைந்துள்ளன. glucose and galactose என்பனவே அவை. அவற்றை ஒன்றிருந்து மற்றதைப் பிரித்து உணவுக் குழாயால் உறிஞ்சப்படுவதற்கு ஏற்றதாக மாற்றுவதற்கு லக்டேஸ் (Lactase) என்ற நொதியம் தேவை.

இந்த நொதியம் ஒருவரது உணவுக் கால்வாயால் முற்று முழுதாகச் சுரக்கப்படாமல் இருந்தாலோ அல்லது போதியளவு சுரக்காமல் இருப்பதால்தான் இக் குறைபாடு ஏற்படுகிறது.

இதன் காரணமாக சிலரால் பால் கலந்த எந்த உணவை உண்டாலும் பிரச்சனை ஏற்படலாம். உதாரணமாக சிறிதளவே பால் கலந்த கேக் பிஸ்கட் போன்றவற்றை உண்டால் கூட ஒரு சிலரில் செமிபாடடையாது. மாறாக பலருக்கு பால் அருந்தினால் மட்டுமே பிரச்சனையாக இருக்கும். எதை உண்பது எதைத் தவிர்ப்பது என்பதைக் கண்டறிந்து நலமாக வாழ்வதே இவர்கள் முன் இருக்கும் முக்கிய சவாலாகும்.

பலருக்கு இப் பிரச்சனை இருந்தபோதும் அது பாலினால்தான் என்பதை பலர் உணர்ந்து கொள்வதில்லை.


இனங்களைப் பொறுத்த வரையில் ஆசியா ஆபிரிக்கா தென் அமெரிக்கா போன்ற பகுதி மக்களுக்கு அதிகமாகவும் ஐரோப்பியர்களிடையே குறைவாகவும் இருக்கிறது.

சில குடும்பங்களின் வளர்ந்தவர்களிடையே அதிகம் காணப்படுகிறது.

பெரும்பாலும் கட்டிளம் பருவத்தில் அல்லது வளர்ந்த பின்னரே அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கின்றன. ஒரு சிலரில் வாழ்நாள் முழுவதும் பாலினால் எந்தவித பிரச்சனையும் இருக்காது. இருந்தாலும் திடீரென ஆரம்பிக்கலாம். இதற்குக் காரணம் முதுமையடைவதால் ஆக இருக்கலாம்.

இருந்தபோதும் பிறவியிலேயே சில குழந்தைகளுக்கு இப் பிரச்சனை இருப்பதுண்டு. இவர்கள் பால் அருந்தினால் வயிற்றோட்டம் ஏற்படும். இது அவர்களது குழந்தைப் பருவ உணவூட்டலில் பெரும் பிரச்சனையாக இருக்கும். இதனால் சோயாப் பாலை கொடுக்க நேர்கிறது. ஆயினும் இது ஒரு சில குழந்தைகளையே தாக்குகிறது.

இதைத் தவிர குறை மாதத் தில் பிறக்கும் குழந்தைகளுக் கும் இதேபோல பால்வெல்லம் இணங்காமைக் குறைபாடு இருப்பதற்கான சாத்தியம் அதிகம். இது தற்காலிக மானதே. குறைமாதமாகப் பிறக்கும் அக் குழந்தையின் உணவுத் தொகுதியானது லக்டேஸ் நொதியத்தை உற்பத்தி செய்வதற்கு தயாராகாததே காரணம் ஆகும். சிறிது காலத்தில் அந்நொதியம் உற்பத்தியாக ஆரம்பித்ததும் தானாகவே குணமாகிவிடும்.



## அறிகுறிகள்

பால் அல்லது பாற் பொருட் களை உட்கொண்ட 30 நிமிடங்கள் முதல் 2 மணி நேரத்திற்குள் அறிகுறிகள் தோன்றும். ஆரம்பத்தில் சொன்ன நோயாளிக்கு ஏற்பட்டவை போலவே அறிகுறிகள் இருக்கும். உதாரணமாக,

வயிற்றுப் பொருமல்

- வயிற்று வலி அல்லது வயிற்று முறுக்கு
- வயிற்றறையில் வாய்வு கடா முடா என ஓடுவது போன்ற சப்தங்கள்
- மலவாயிலால் வாய்வு வெளியேறுதல்
- வயிற்றோட்டம் அல்லது மலம் இளக்கமாக வெளியேறல்
- ஒரு சிலரில் ஓங்காளம், வாந்தி ஏற்படலாம்

இருந்தபோதும் வயிற்றில் வாய்வுத் தொல்லை உள்ள அனைவரும் தமக்கு பால் வெல்ல இணங்காமை பிரச்சனைதான் உள்ளது என்ற முடிவிற்கு வரக் கூடாது. வேறு பல உணவுகளாலும் வயிற்றில் வாய்வுத் தொல்லை ஏற்படலாம்.

மறுதலையாக, பால் குடித்த பின்னர் ஒரு தடவை உங்களுக்கு பிரச்சனைகள் தோன்றினால் பால் வெல்லம் இணங்காமைதான் என முடிவு கட்ட வேண்டாம். ஒவ்வொரு முறை பால் குடித்த பின்னரும் அல்லது ஒவ்வொரு முறையும் பாற் பொருட்களை உட்கொண்ட பின்னரும் வயிற்றில் பிரச்சனை தோன்றுகிறது எனில் அது பாலால் ஏற்பட்டதாக இருக்கலாம்.

## எவ்வாறு கண்டறிவது

சந்தேகம் ஏற்பட்டால் மருத்துவருடன் பேசுங்கள்.

பாலையும் பாற் பொருட்களையும் சில தினங்களுக்கு முற்றாகத் தவிர்ப்பதன் மூலம் ஒரு இப் பிரச்சனை இருக்கிறதா இல்லையா என தீர்மானிக்க முடியும்.

ஆனால் இதில் ஒரு பிரச்சனை உண்டு. பாலை ஒருவர் பாலாகக் அருந்தாவிட்டால் கூட வேறு உணவுப் பண்டங்களில் அவை மறைவாகக் கலந்திருப்பதால் அறிகுறிகள் தோன்றலாம்.

உதாரணமாக கேக், பிஸ்கற், பான்கேக், குக்கீஸ் போன்றவற்றில் கலந்திருக்கலாம்.

காலையில் பலர் உட்கொள்ளும் Cereal உணவுகளில் கலந்திருக்கும்.

சொக்ளட், சலட் (salad dressings) போன்றவற்றிலும் இருக்கக் கூடும்.

இவ்வாறு பல உணவுகளிலும் பால் அல்லது பாற்பொருட்கள் கலந்திருப்பதால் பாலைத் தவிர்க்கும் உணவுமுறை (elimination diet) சில வேளைகளில் தவறான முடிவைக் கொடுக்கக் கூடும்.

milk challenge என்ற முறையிலும் பரிசோதித்து அறியலாம். இரவு உணவிற்குப் பின்னர் வேறெதுவும் உட்கொள்ளாது காலையில் ஒரு கப் பாலை மட்டும் அருந்த வேண்டும். வேறு எதுவும் உண்ணக் கூடாது. பால் வெல்லம் இணங்காமை உள்ளவராயின் 3 முதல் 5 மணிநேரத்திற்குள் வயிற்றுப் பொருமல் வயிற்று வலி வயிற்றோட்டம் போன்ற வழமையான அறிகுறிகள் தோன்றும்.

இவற்றைத் தவிர சுவாசக் காற்றில் ஹைதரஜன் வாய்வின் அளவை கண்டறிவதன் மூலம் நோயை இனங்காணும் பரிசோதனை breath test. மேலை நாடுகளில் செய்யப்படுகிறது. ஆயினும் இலங்கையில் கிடைப்பதாகத் தெரியவில்லை.

மலப் பரிசோதனை, பால் அருந்திய பின்னர் குருதி குளுக்கோஸ் பரிசோதனை, சிறுகுடலில் இருந்து திசுக்களை வெட்டி எடுத்து பரிசோதிக்கும் முறை ஆகியனவும் சொல்லப்படுகின்றன. ஆயினும் பெருமளவு உதவுவதில்லை.

## சிகிச்சை என்ன?

இந்தப் பிரச்சனைக்கான முக்கிய தீர்வு ஒருவர் தனது உணவில் சேர்க்கும் பால் அருந்துவதை மட்டுமின்றி ஏனைய பாற் பொருட்களைக் குறைத்துக் கொள்வதாகும்.

இதற்குக் காரணம் லக்டோஸ் இன் ரொலரன்ஸ் பிரச்சனை உள்ளவர்கள் சிலருக்கு, ஓரளவு பாலுணவை உட்கொள்ளும் போது பிரச்சனைகள் ஏற்படுவதில்லை. அத்தகையவர்களுக்கு பாலை அருந்துவதை மட்டும் தவிர்த்தாலே போதும். சுகம் கிடைக்கும்.

ஐஸ்கிறீம், சீஸ், தயிர், யோகட் போன்றவையும் அதிகளவு பாற்பொருளை கொண்ட உணவுகளாகும். இவற்றையும் சிலர் தவிர்க்க வேண்டியிருக்கும்.

இருந்தபோதும் தயிர், யோகட் ஆகியவை பெரும்பாலன லக்டோஸ் இன் ரொலரன்ஸ் உள்ளவர்களுக்கு எந்தவித பிரச்சனையையும் கொடுப்பதில்லை.

இதற்குக் காரணம் என்ன? யோகட் தயிர் போன்றவற்றில் உள்ள ஒரு பக்றீரியாக் கிருமியில் இயல்பாக உள்ள லக்டேஸ் (lactase) நொதியமானது. நீங்கள் உட்கொண்ட பாலிலுள்ள லக்டோஸ் வெல்லத்தை ஓரளவு சமிபாடடையச் செய்துவிடுவதாகும்.

அத்துடன் யோகட் ஆனது இரைப்பையிலிருந்து பால் போன்று வேகமாக வெளியேறுவதில்லை. சற்று வேகங் குறைவாக உணவுக் குழாயின் ஊடாக யோகட் செல்லும்போது எமது உணவுக் குழாயில் இயல்பாக உள்ள பக்றீரியா கிருமிகள் அவற்றை உடைத்து சமிபாடடையச் செய்துவிடுகின்றன.

உணவுகளுடன் சேர்த்து பாற்பொருட்களை உட்கொள்வதாலும் பலருக்கு இணங்காமை அறிகுறிகள் ஏற்படுவதில்லை. முக்கியமாக கொழுப்பும் கலந்த உணவுகளை உட்கொள்ளும் போது பாற்பொருள் இரைப்பையிலிருந்து வெளியேறுவது அதிக நேரம் எடுக்கிறது. இதன் காரணமாக அவை ஆறுதலாக சிறுகுடலின் ஊடாகப் பயணிக்கும்போது அதிலுள்ள பக்றீரியா கிருமிகளிலுள்ள லக்டேஸ் நொதியம் பாலை சம்பாடடையச் செய்துவிடுகிறது.

பாலைச் சமிபாடடையச் செய்யும் லக்டேஸ் நொதியம் சில நாடுகளில் மாத்திரைகளாகக் கிடைக்கிறது. பாலுணவு உண்ணும் இதையும் சேர்த்து உண்டால் வயிற்றுப் பிரச்சனை ஏற்படாது. ஆயினும் இலங்கையில் கிடைப்பதாகத் தெரியவில்லை.

பாலில் அதிகளவு கல்சியம் கிடைக்கிறது. அது நல்ல தரத்தினாலான கல்சியம் ஆகும். எனவே பாலலுணவு இணங்காதவர்களுக்கு கல்சியம் குறைபாடு ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகம். விற்றமின் டி கலந்த கல்சியம் மாத்திரைகளை உட்கொள்ள வேண்டிய தேவை ஏற்படலாம்.

ஒரு புதிய தகவல். மரபணுப் பரிசோதனைகள் மூலம் பால்வெல்லம் இணங்காமைப் பிரச்சனையை இப்பொழுது இனங்காண முடியும். இத்தகைய நவீன விலையுர்ந்த பரிசோதனை முறைகள் நடைமுறைச் சாத்தியமற்றவை. அதே போல லக்டேஸ் இல்லாத எலிகளில் அதை உற்பத்தி செய்ய உதவும் மரமணுவை மாற்றீடு செய்யும் மரபணு சிகிச்சை முறையும் பரீட்சார்த்தமாக வெற்றி ஈட்டியது. ஆனாலும் இது மனிதர்களில் செய்து பார்க்கப்படவில்லை. எதிர்காலத்தில் கூட வழமையான சிகச்சையாக இது வருவதற்கான சாத்தியம் மிகக் குறைவே.

பால் வெல்லம் இணங்காமை, பால் ஒவ்வாமை அல்ல (Milk allergy) என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். முற்றிலும் வேறானவை. பால் ஒவ்வாமை பெரும்பாலும் குழந்தைகளிலேயே ஏற்படும். அது பற்றி வேறு ஒரு பதிவு பின்னர் போடலாம். ஏன் ஐயா நீங்கள் கட்டுரையில் குறிப் பட்ட நபர் காலையில் மட்டும் குறைந்தது இரண்டு தரமாவது ஆபிசில் மலங் கழிக்கச் செல்கிறார் என அடுத்த வாரம் ஓரிருவராவது என்னிடம் கேட்காமல் விடமாட்டார்கள்.

அவர் காலையில் சாப்பிடுவதில்லை. தடித்த பால் கோப்பி அல்லது தேநீர் அருந்துவார். ஆபீஸ் சென்ற சிறிது நேரத்தில் அது அவரது வயிற்றைக் கலக்கியடிக்கும். முற்பகல் 10 மணியளவில் ஆபிசியில் ஒரு பால் தேநீர் அருந்துவார். அதுவும் சற்று நேரத்தில் மலசல கூடத்திற்கு விரட்டும்.

இப்பொழுது பாலில்லாத தேநீர் அருந்துவதால் கூட வேலை செய்பவர்கள் கணக்கெடுக்கும் வேலை நின்று போயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓதுக்கப்பட்ட யுவராஜ்

பொதுவாக உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியை நடந்துகின்ற நாடு கிண்ணத்தை வென்றதில்லை ஆனால் 2011ஆம் ஆண்டு இந்தியா, இலங்கை, வங்கதேசம் ஆகிய நாடுகள் இணைந்து நடத்திய பத்தாவது, உலகக் கிண்ணப் போட்டியின் இறுதிப் போட்டியில் இலங்கையை வீழ்த்தி வரலாற்றை மாற்றியது இந்தியா.

இதற்கு முதுகெலும்பாக இருந்தவர் வேறுயாருமல்ல சகலதுறை வீரர் யுவராஜ்சிங்தான். அந்தத் தொடரில் 6 லீக் ஆட்டங்கள், காலிறுதி, அரையிறுதி, இறுதி ஆட்டம் என மொத்தம் 9 ஆட்டங்களில் விளையாடிய யுவராஜ் மொத்தம் 362 ஓட்டங்களை குவித்தது மட்டுமன்றி தனது மாயாஜால சுழல் பந்து மூலம், 15 விக்கெட்டுகளும் வீழ்த்தி தொடர்நாயகன் விருதையும் தட்டிச் சென்றவர்.

ஆனால் 2013 ஆம் ஆண்டு வங்கதேசத்தின் மிர்பூரில் நடைபெற்ற 20 - 20 உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதி போட்டியில் இந்தியணி இலங்கையிடம் தோல்வியடைந்தது. இதற்கு யுவராஜின் மோசமான துடுப்பாட்டமே காரணம் என்று பலதரப்பட்ட விமர்சனங்கள் எழுந்தன.

காரணம் அடித்து ஆடவேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் களமிறக்கப்பட்ட இவர் ஏனோ தானோ என்று ஆடி துடுப்பில் படாமல் பல பந்துகள் விக்கெட் காப்பாளர் வசம் சென்றன. அன்று 21 பந்துகளைச் சந்தித்த யுவராஜ் 11 ஓட்டங்களை மட்டுமே எடுத்து குலசேகரா பந்து வீச்சில் பெரேராவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தமையால் இந்திய அணியால் இலங்கைக்கு சவாலான இலக்கை நிர்ணயிக்கமுடியவில்லை.இதை மனதில் வைத்தே இந்தமுறை உலகக்கிண்ண அணியில் யுவராஜுக்கு இடம் கொடுக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

இடந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் இந்தியா சம்பியன் பட்டம் வெல்ல முக்கிய காரணமாக இருந்ததற்காக, தொடர் நாயகன் விருதை தட்டிச் சென்றவர் யுவராஜ்சிங். ஆனால் 2015 உலகக் கிண்ணப்போட்டியில் இந்தியஅணியில் யுவராஜ்சிங் இடம்பெறவில்லை.

# முதல் கோணல்

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும் நியுசிலாந்து அணிக்கும் இடையில் இடம்பெற்ற இரண்டு டெஸ்ட் போட்டியிலும் இலங்கையணி படுதோல்வியடைந்து தொடரை இழந்தது.

இரு அணிகளுக்கு இடையில் இரண்டு டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஏழு ஒருநாள் போட்டிகள் அடங்கிய தொடர் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முதலாவது டெஸ்ட்டில் நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்ற நிலையில், இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கடந்த 3 ஆம் திகதி வெலிங்டனில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதன்படி துடுப்புடன் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு கேன் வில்லியம்சன் அதிகபட்சமாக 69 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தபோதும்,மற்றைய வீரர்கள் எவரும் அரைச்சதம் கூட கடக்காத நிலையில் அடுத்தடுத்து அரங்கு திரும்ப நியூசிலாந்து அணி 221 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. இலங்கை சார்பில் முதலாவது இன்னிங்சில் அபாரமாக பந்துவீசிய நுவன் பிரதீப் 4 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

இதனையடுத்து தனது முதலாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் அடுத்தடுத்து விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்ட போதிலும் தினேஷ் சந்திமால் - குமார் சங்கக்கார ஜோடி அணியை சரிவில் இருந்து மீட்டது. 67 ஓட்டங்களுடன் சந்திமால் அரங்கு திரும்பினார்.




இருப்பினும் அணியின் நிலைகருதி நிதானமாக துடுப் பெடுத்தாடிய சங்ககார 203 ஓட்டங்களை பெற்று, ஆட்டமி ழந்து செல்ல அதன் பின்னர் களமிறங்கியவர்கள் வந்த வேகத்தில் அரங்கு திரும்ப 356 ஓட்டங்களுக்கு இலங்கை அணி சகல விக்கெட்டுக் களையும் இழந்தது.

இதன்படி இலங்கை 135 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. தனது இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து ஐந்து விக்கெட் இழப்புக்கு 524 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.


நியூசிலாந்து அணிசார்பாக 6 வது விக்கெட்டுக்காக ஜோடிசேர்ந்த கேன் வில்லியம்சன் 242 ஓட்டங்களையும், வாட்லிங் 142 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். இதன் மூலம் 6 ஆவது விக்கெட்டுக்கான அதிகபட்ச இணைப்பட்ட ஓட்டமாக 365 ஓட்டங்கள் பதிவாகியுள்ளது.

இதனையடுத்து 390 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி சார்பில் குஷல் சில்வா 50 ஓட்டங்களையும், திரிமன்னே ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர்.

ஏனைய வீரர்கள் எவரும் அவ்வளவாக பிரகாசிக்காத நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த இலங்கை 192 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியைத் தழுவியது.

இதன்படி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 2-0 என நியூசிலாந்து வசமாக தோல்வியில் புது வருடத்தை ஆரம்பித்துள்ளது இலங்கை அணி.

# ஒரேபந்தில் உலகசாதனை



மேற்கு இந்தியத் தீவுகள் அணி வீரர் கிரேக் பிரட்வெய்ட். ஒரே ஒரு பந்தில் உலக சாதனை படைத்து விட்டார். கிரிக்கெட் வரலாற்றில், ஒரே பந்தில் படைக்கப்பட்ட உலக சாதனை இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

தென்னாபிரிக்கா அணிக்கும் - மேற்கு இந்தியத் தீவுகளுக்கும் இடையில் நியூலேண்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற 3 வது டெஸ்ட் போட்டியில் தான் இந்த சுவாரஸ்யமான, எதிர்பாராத சாதனை அரங்கேறியது.

தனக்கு வந்த ஒரு பந்தை வேகமாக அடித்து விரட்டிய பிரட்வெய்ட், உடனடி யாக ஓட்டம் எடுக்க ஓடினார். ஓடியே 3 ஓட்டங்களை எடுத்து விட்டார். அப்போது பந்தை வசப்படுத்திய தென் ஆப்பிரிக்க விக்கெட் காப்பாளர் டிவில்லியர்ஸ், அதை பந்து வீச்சாளர் முனையில் உள்ள விக்கெட்டை நோக்கி எறிந்தார்.

இருப்பினும் அவர் எறிந்த பந்து வேகமாக குறிதவறி விக்கெட்டில் படாமல் பவுண்டரி எல்லையைக் கடந்தது. இதனால் பிரட்வெய்ட்டுக்கு 7 ஓட்டங்கள் கிடைத்து. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இப்படி ஒரே பந்தில் 7 ஓட்டங்கள் எடுத்த சம்பவம் இப்போதுதான் அரங்கேறியுள்ளது. டிவில்லியர்ஸின் புண்ணியத்தில் ஒரேபந்தில் உலக சாதனை படைத்துவிட்டார் பிரட்வெய்ட்.

# பறிபோன வாய்ப்பு



உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் 15 பேர் கொண்ட அணியில் இடம்பெறுவது என்பது மிகவும் கடினாமான ஒரு விடயமாக மாறி வருகின்றது. காரணம் இளம் வீரர்கள் தமது ஆக்ரோஷமான திறமைகளைக் காட்டி வருகின்றனர். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் வங்கதேசத்து தேசிய அணியில் தேர்வு செய்யப்பட்ட வேகப்பந்து வீச்சாளர் ருபேல் ஹொசைன், இளம் நடிகையான காதலியை பாலியல் துஸ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வங்கதேசத்து வேகப்பந்து வீச்சாளர் ருபேல் ஹொசைனுக்கும் 19 வயதான, வங்கதேச சினிமா நடிகையான நஸ்னின் அக்தர் ஹேப்பிக்கும், இடையே காதல் மலர்ந்து திருமணம் செய்து கொள்ளும் நிலைவரையில் கணவன் மனைவிபோன்று உல்லாசமாக வாழ்ந்துள்ளார்கள்.

ஆனாலும் காதல் வாழ்க்கை கசக்க திருமணம் செய்வதாக அளித்த வாக்குறுதியை திடீரென ருபேல் திரும்பப் பெற்றதால், கடுப்படைந்த நஸ்னின் தன்னை ருபேல் ஹொசைன் காதலித்து பலாத்காரம் செய்து விட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவுசெய்திருந்தார்.

பின்னர் மனம் தளர்ந்த நஸ்னின் திருமணத்திற்கு ருபேல் சம்மதித்தால் வழக்கை திரும்ப பெற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்திருந்தார்.

ஆனால் இந்தக்குற்றச்சாட்டை மறுத்துவந்த ருபேல் இது ஒரு மறைமுக மிரட்டல் என்று கூறி உலகக் கிண்ண ஆயத்த பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதால் வங்கதேச அணி நிர்வாகம் திகைப்படைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம் வரையுங்கள்... ஜப்பான் செல்லுங்கள்...

TOYOTA

**கனவு கார் ஓவியப்போட்டி**

15 வயதிற்கு கீழ்ப்பட்ட அனைத்து சிறுவர்களும் பெற்றோருடன் ஜப்பான் சென்றுவரும் வாய்ப்பு! செய்யவேண்டியது உங்கள் கனவு காரினை வரைந்து அனுப்புவது மட்டுமே.

வயது எல்லை: • 8 வயதிற்கு கீழ்ப்பட்டோர் • 8 - 11 வயதிற்கு இடைப்பட்டோர் • 12 - 15 வயதிற்கு இடைப்பட்டோர்

- ஓவியங்களை A3 (297மிமி - 420மிமி) அளவு பேப்பரில் சமர்ப்பிக்கவேண்டும்.
- விண்ணப்பப்படிவங்கள் மற்றும் போட்டி விபரங்களை உங்கள் பாடசாலைகளில் அல்லது இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- ஓவியங்களை தபால் மூலம் அனுப்பலாம் அல்லது எந்தவொரு டொயோடா லங்கா கிளையிலும் ஒப்படைக்கலாம்.

**முடிவு திகதி 2015 ஜனவரி 31**

**டொயோடா லங்கா (பிரை) லிமிட்டட்**
337, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
கிளைகள் : இரத்மலான, பஞ்சிகாவத்தை, நுகேகொடை, நீர்கொழும்பு, கம்பஹா, களுத்தறை, கண்டி, காலி, அனுராதபுரம், அம்பாறை, குருநாகல

தொடர்புகளுக்கு : 0777 939 000, 0112 939 000
மின்னஞ்சல் : dreamcar@toyota.lk
www.dreamcar.lk

---

ஷீர்ஷபதி

LINK NATURAL **கேஷா**

முழுமையான ஆயுர்வேத கூந்தல் எண்ணெய் பராமரிப்பு

தினசரி பாவனையின் மூலம்
- தலைமுடிக்கு போசனையை தருகின்றது
- ஆரோக்கியமானதும் கவர்ச்சியானதுமான தலை முடியை தருகிறது
- பொடுகினை தடுக்கின்றது
- தலைமுடி நுனியில் வெடித்தலை தடுக்கிறது



தற்போது கடைகளில், லிங்க் கேஷாவில் அடங்கியிருக்கும் மருத்துவ மூலிகைகளின் அனுகூலங்களை பாதுகாப்பாக உங்களுக்கு வழங்குவதற்காக கண்ணாடி போத்தலுடனான புதிய பெட்டி

லிங்க் நெச்சுரல் புரொடக்ஸ் தனியார் நிறுவனம் சீ.ஐ.சீ. இல்லம் 199, கிவ் வீதி, கொழும்பு 02. தொ.பே.எண். : 011-2409294 மின்அஞ்சல் : info@linknaturalproducts.com இணையம் : www.linknaturalproducts.com

---

CA | SCHOOL OF ACCOUNTING & BUSINESS
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA



ஜனவரி 2015 ஆட்சேர்ப்பில் பதிவுசெய்து கொள்ளுங்கள்

## தனித்துவமாக திகழுங்கள்

**தகைமைகள்**
- இலங்கைப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி அல்லது Edexcel/Cambridge Advanced Level பரீட்சையில் சித்தி

**முதலீடு**
- வருடச் செலவு ரூ. 180,000/-
- விஷேட கல்விக் கடன் மற்றும் இலகு தவணைக் கட்டண வசதிகள் உண்டு

**காலம்**
- BSc. (Applied Accounting) சாதாரண பட்டம் - 3 வருடங்கள்
- BSc. (Applied Accounting) விஷேட பட்டம் - 4 வருடங்கள்

UGC APPROVED
THE ONLY BSc. (APPLIED ACCOUNTING) DEGREE IN SRI LANKA

**முக்கிய குறிப்புகள்**
- Business Finance, Strategic Management, Economics, Project Management, Corporate Law, Human Resource Management, Information & Communication Technology போன்ற பாகங்களை உள்ளடக்கிய சாதாரண / விஷேட பட்டப் படிப்பு
- பல்கலைக்கழக பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் இத் துறையின் நிபுணர்களையும் தமது அணியாகக் கொண்ட அனைத்து வசதிகளையும் தம்வசம் கொண்டுள்ள கல்வி நிறுவனமாகும்
- சிறந்த நிறுவனங்களில் உள்ளகப் பயிற்சி முறைகளினாலும் வேலை வாய்ப்புகளினாலும் தொழில் துறைக்கு சிறந்த அனுபவம் வழங்கப்படும்
- முழு நேர அல்லது பகுதி நேர மாணவராக இணையக் கூடிய வசதி
- அவுஸ்திரேலிய La Trobe பல்கலைக்கழகம் மற்றும் CPA அவுஸ்திரேலியாவினால் அங்கீகரிக்கப்பட்டது.

கணக்கியல் மற்றும் வணிகக் கல்விகள் பீடம்,
இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், 30A, மலலசேகர மாவத்தை, கொழும்பு - 7.

Hotline: 011 2 352077
Email: sab@casrilanka.org
www.casrilanka.com

La Trobe Business School | CPA | ACCREDITED PROGRAM | Ministry of Co-operatives and Internal Trade

www.sarva.lk

---

என்ஜின் பழுதுபார்ப்பின் முன்னோடி நிபுணர்களான
**எதிரிசிங்க பிறதர்ஸின்**
**புதுமையானவாக்குறுதி!**

நாம் ஏதேனுமொரு என்ஜினைப் பழுதுபார்த்த பின்பு, தவறு யாருடையதாக இருந்தாலும், அதே பழுதுபார்ப்பை மீண்டும் செய்ய வேண்டிய தேவை ஒரு வருட காலத்திற்குள் ஏற்படுமாயின் நாம் அதனை இலவசமாக செய்து கொடுப்போம்.



**உங்கள் வாகன என்ஜினை மிகத் திறமையாகவும் நம்பிக்கையாகவும் பழுதுபார்ப்பதற்கு எம்மிடம் பதிவு செய்துள்ள கராஜ் ஒன்றிற்குக் கொண்டுசெல்லுங்கள்.**

கராஜ் உரிமையாளர்களே, உங்கள் கராஜ்களை எதிரிசிங்க பிறதர்ஸ் நிறுவனத்தில் பதிவு செய்யுங்கள்.

**எதிரிசிங்க பிறதர்ஸ் லிமிட்டட்**
ஓட்டோ கோர்ட், 567, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் மாவத்தை, கொழும்பு 14.

www.autocourt.net | கிரெடிட் கார்ட் வசதியுண்டு

077 88 33 370

---

# நாட்டுக்கோழி குஞ்சு விற்பனைக்கு

**கம் குக்கூலு (GAM KUKULOO)**



ஒரு நாள் - 60/=
இரண்டு கிழமை - 100/=
ஒரு மாதம் - 200/=

**CALL : 0723409941**
(நாத்தாண்டியா)

max adz





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உங்கள் HSBC கடனட்டையோடு எங்கு சென்றாலும் வரவேற்கப்படுவீர்கள்

புன்னகையுடன் முன்செல்லுங்கள். உங்களை சுற்றியுள்ள மகிழ்ச்சி உங்களுக்குரியதே என்பதை நீங்கள் அறிவீர்கள். HSBC க்கு இதனைத் தவிர வேறொன்றும் தேவையில்லை. அதனால் தான் ஆண்டுதோறும் சிறந்த சலுகைகளை உலக அங்கீகாரம் பெற்ற HSBC கடன் அட்டை உங்களுக்கு வழங்குகின்றது. அது உங்களை எவ்விடத்திலும் வரவேற்கின்றது. எமது வட்டியற்ற 51 நாள் கடன் வசதி, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒப்பற்ற சலுகைகள் மற்றும் பல அனுகூலங்கள் கிடைப்பதை HSBC கடன் அட்டை உங்களுக்கு உணர்த்தும்.

### 30 நாள் சேவை உறுதிப்பாடு

உங்களது நிதித் தேவைகளையும் அன்றாட தேவைகளையும் HSBC கடன் அட்டை நிறைவேற்றவில்லையென்றால் அதனை 30 நாளைக்குள்** HSBC க்கு மீள் ஒப்படைக்கும் சலுகையும் உங்களுக்கு வழங்கப்படுகின்றது. அத்தோடு இணைப்புக் கட்டணமும் முழுமையாக மீள் செலுத்தப்படும்.

நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.

** உங்கள் கடன் அட்டை முதலாவது கொடுப்பனவு நாளில் இருந்து 30 நாட்களுக்குள் செல்லுபடியாகும்.

HSBC கடன் அட்டை ஒன்றிற்கு விண்ணப்பிக்க அழையுங்கள் 0722 511 533 அல்லது அழுத்துங்கள்: www.hsbc.lk
பிரவேசியுங்கள்: உங்கள் அருகிலுள்ள HSBC கிளை அலுவலகத்திற்கு



HSBC கடன் அட்டை, உள்நாட்டுக்கும் வெளிநாட்டுக்கும் ஒரே அட்டை

ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட் ஆனது இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும்.
ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோர்ப்பரேஷன் லிமிடெட்- ஸ்ரீ லங்கா வெளியீடு. பிட்ச் தரப்படுத்தலில் AAA (lka) சான்றிதழைப் பெற்றுள்ளது.

HSBC

---

# மின்சார கட்டணத்தில் குறைவாக
# SIZE இல் அதிகமாக
# PRICE இல் சிக்கனமான
## குளிர்சாதனம் அபான்ஸிடமிருந்து மாத்திரமே



ABS GARDNER DIXON HALL

வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

**ARD - 230**
- கொள்ளளவு 230L
- நேரடியான குளிர்மை
- 4 நட்சத்திரம்
- எந்த சூழலிலும் பாவிக்க கூடியது
- சுற்றாடல் தோழன்
- குறைந்தளவு சத்தம்
- இலகுவாக இடமாற்றக்கூடியது

ரூ.40,900
மாதாந்தம் ரூ.3,215

வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு

**ARF 252**
- இரட்டைக்கதவு
- சில்வர் நிறம்
- மீளமைக்கக்கூடிய தர்மோஸ்டேட்
- உள்ளக மின்குமிழ் வசதி
- கொள்ளளவு 250L
- நேரடியான குளிர்மை
- 4 நட்சத்திரம்
- ஐஸ் படியாது
- எந்த சூழலிலும் பாவிக்க கூடியது
- கிஸ்பர்
- சுற்றாடல் தோழன்
- குறைந்தளவு சத்தம்
- இலகுவாக இடமாற்றக்கூடியது

ரூ.59,900
மாதாந்தம் ரூ.3,800

* நிபந்தனைகளுக்குட்பட்டது

நாடெங்கிலும் உள்ள அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெறலாம்.

Abans

---

# முதலாம் வருட பூர்த்தியை முன்னிட்டு
## விசேட தைத்திருநாள் கொடுப்பனவு

ரூ. 8,000/-இற்கு மேற்பட்ட ஒவ்வொரு கொள்வனவுக்கும் ரூ. 1,000 பெறுமதிவாய்ந்த Cargills வவுச்சரினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

இச்சலுகை ஜனவரி 31ம் திகதி வரை மட்டுமே.



Signature
The Achiever's Choice

கார்கில்ஸ் சதுக்கம், 420, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி என் : 021 322 7714

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள வாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 ஜனவரி 14ஆம் திகதி வெளியிடப்பட்டது.